அறைவு 02 இயம் 29 March 01 - 07, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

விலை : 30.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

## கி.பி 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சர்வதேச துறைமுகம் திருமலையில்

திருகோணமலையில் இயங்கியதாகக் கருதப்படும் சர்வதேசத் துறைமுகமொன்றின் சிதைவுகளை அகழ்வாராய்ச்சித் திணைக்களம் கண்டு பிடித்துள்ளது.


சேருவிலைப் பகுதியில் செம்புத் தாதுகளைப் பயன்படுத்தி உலோகங்களைத் தயாரித்து வேலை செய்யும் கலை தொடர்பாக களணி பல்கலைக்கழகத்தில் அகழ்வாராய்ச்சித்..... 13

## மனுஸ் சட்டவிரோதக் குடியேற்ற முகாமின் உதவி முகாமையாளராக முன்னாள் இராணுவ அலுவலர்

அவுஸ்திரேலியா நோக்கிச் சென்ற சட்டவிரோதக் குடியேற்றவாசிகளைத் தடுத்து வைத்திருக்கும் முகாமான மனுஸ் தீவு முகாமின் பிரதி முகாமையாளராக இலங்கையின் முன்னைநாள் இராணுவ அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்தகவலை வெளியிட்டுள்ள அவுஸ்திரேலிய ஒலிபரப்புச் சேவை இவ்விடயம் தொடர்பான புலனாய்விலும் இறங்கியுள்ளது.

## சிவராத்திரி



பாடல் பெற்ற திருத்தலமான திருக்கோணேஸ்வரத்தில் சிவராத்திரி சிறப்பான ஏற்பாடுகளுடன் கடந்த 27ம் திகதி நடந்தேறியது. அதனைத் தொடர்ந்து மாதுமை அம்பாள் உடனுறை கோணேசப் பெருமான் நகர்வலம் வரத் தொடங்கியுள்ளார்.

கடந்த 28ம் திகதி ஆரம்பமான இந்நகர்வலம் ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இம்முறை சோடனைகளில் இயன்றவரை பொலித்தீன்...... 13

## கிழக்கின் நியமனங்களில்
# மீண்டும் இன விகிதாசாரம்



கிழக்கு மாகாண சபை
නැගෙනහිර පළාත් සභාව
Eastern Provincial Council

அரசதுறையில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கிழக்கு மாகாண சபையால் நடாத்தப்படவுள்ள போட்டிப்பரீட்சைகள் மற்றும் நேர்முகத் தேர்வுகள் யாவற்றிலும் இனவிகிதாசார முறை பின்பற்றப்படும் என்பது தெளிவாகியுள்ளது.

கடந்த மாதம் இமனவிகிதாசார முறையின் அடிப்படையில் வழங்கப்பட்ட நியமனங்களின் போது அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருந்த தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து தற்போது கிழக்கு மாகாண சபையால் வெளியிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கான அறிவித்தலில் அதே முறையிலேயே நியமனங்கள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இன விகிதாசார அடிப்படையில் நியமனங்களை மேற்கொள்வது தவறானது என தீர்ப்பளிக்குமாறு பாதிக்கப்பட்டோர் உயர் நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டிப்பரீட்சையில் திறமையைக் காட்டியிருப்பினும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் நியமனத்தின் போது தவிர்க்கப்பட்ட முதலாவது சம்பவமாக .... 13

# இந்தியா காலூன்றும் திட்டமே சம்பூர்

இலங்கை அரசிற்கும் இந்திய அரசிற்கும் இடையே எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக சம்பூரில் உருவாக்கப்படவுள்ள கரி மின்நிலையத்தின் ஊடாக இந்தியா தனது காலைக் கிழக்கில் ஊன்றிக் கொள்ள விரும்புகின்றதே ஒழிய இலங்கையின் மின்தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கம் எதனையும் அங்கு காணவில்லை என பெயரிட விரும்பாத மின்சார சபை உயர் பொறியியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உருவாக்கப்பட்டுள்ள திருகோணமலை வலுக் கம்பனி (ரிங்கோமலி பவர் கொம்பனி) ஊடாக சம்பூரின் ஆக்கிரமிக்கப்பட்ட நிலப் பகுதியில் கரி மின்நிலைய உற்பத்தித் தொழிற்சாலை அமையவுள்ளது.

இலங்கை மின்சார சபையாலும் இந்திய சுடுவலு மின் அதிகாரசபையாலும் அரைக்கரைவாசி முதலீட்டுடன் தொடங்கப்பட்ட இத் திட்டமே, கட்டுமாணப் பணிகளையும் ஆலோசனை மற்றும் மீளாய்வுப் பணிகளையும்...... 13

## கிழக்கில் காணாமற்போனோர் ஆணைக்குழு




1990ம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டு வரைக்குமான காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவென உருவாக்கப்பட்டுள்ள சனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் கிழக்கில் மட்டக்களப்பில் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் பங்குனி மாதம் 20ம் திகதி தொடக்கம் 22ம் திகதி....... 13

**"இந்தியாவிற்குத் தேவைப்படும் விடுதலைப் புலிகள்"** (பக்கம் 03)

# தனித் தமிழீழத்திற்கு வாக்கெடுப்பு




உயர்ரக கடல் மீன்வகைகளை உற்பத்தி செய்யும் மற்றுமோர் புதிய தொழில்நுட்ப முறையான ''கூண்டுக்குள் கடல் மீன் உற்பத்தி'' செய்யும் திட்டமானது திருகோணமலையில் ஆரம்பமாகியுள்ளது. துருப்பிடிக்காத பாரிய இரும்புக் கூண்டுகளுக்குள் வைத்து சிறந்த ரக மீன் குஞ்சுகளை வளர்க்கும் திட்டத்தினை மத்திய மீன்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த சனிக்கிழமை கிழக்கில் ஆரம்பித்து வைத்தார்.

ஸ்கொட்லாந்து நியமங்களுக்கு அமைவாக, வெளிநாட்டுக் கம்பனியான ஓசியன்பிக் நிறுவனத்துடன் இலங்கையின் கம்பனியான.... 13

இலங்கையில் தனி ஈழம் அமைக்க இலங்கை வாழ் தமிழர்களிடம் வாக்கெடுப்பு நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அ.தி.மு.க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கான அ.தி.மு.க.வின் தேர்தல் விஞ்ஞாபனம், அக்கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழக முதலமைச்சருமான ஜெயலலிதாவினால் கடந்த 25ம் திகதி வெளியிடப்பட்டது. அத் தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே வாக்கெடுப்பு நடாத்த வழிகோலுவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் கடந்த உள்நாட்டுப் போரின்போது சர்வதேச விதிமுறைகளை மீறி போர்க்குற்றங்கள் நிகழ்த்தியவர்களை சர்வதேச நீதிமன்றம்..... 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

## தென்னிந்திய உணர்வும்...அறிவும்...

இந்தியத் தமிழர்கள் உண்மையாகவே ஈழத் தமிழருக்காக அவர்தம் நல்வாழ்வுக்காக தமது முயற்சியைத் தொடர்ந்த வண்ணமே உள்ளனர். அம் முயற்சியானது ஆழ்மன உணர்வுகளுடன் இரண்டறக் கலந்து, உணர்வு பூர்வமான நடவடிக்கைகளாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனாலும் பூகோளமயமாகியுள்ள உலகத் தலைவிதியின் கரங்களில் இருந்து இந்தியத் தமிழரின் உணர்வுப் போராட்டம் விடுபட முடியவில்லை தான். இந்தியத் தமிழ் அரசியல் அதற்குள் புகுந்து கொண்டு அப்போராட்டத்தில் இருந்து தனக்காகவும் சில நன்மைகளை நுகராமல் இல்லை.

இக்கணத்தில மீண்டும் சீனப் பெருந் தலைவர் மா ஓ சேதுங் அவர்களின் வார்த்தைகள் நினைவிற்கு வருகின்றன.

"ஒவ்வொரு தனிமனிதனின் தலைவிதியையும் அரசியல் தான் தீர்மானிக்கின்றது" என்ற அவரது கூற்றுப்படி இந்தியத் தமிழரால் முன்னெடுக்கப்படும் ஈழத்தமிழர் ஆதரவுப் போராட்டமும் ஒரு அரசியல் வடிவத்திற்குள் வீழத்தப்படத்தான் வேண்டும்.

அவ்வாறு வீழ்த்தப்படுவதை தவிர்க்க முடியாது. ஆனால் அப் போராட்டை வைத்து பெரும் அரசியலையே முன்னெடுத்துச் செல்வது தவறான முன்னுதாரணமாகப் போய்விடுமோ என அஞ்சத் தோன்றுகின்றது.

இன்று தமிழகத் தலைவரால் முன்னெடுக்கப்பட்டுள்ள இரண்டு விடயங்களையிட்டு ஈழத்தமிழர் அஞ்ச வேண்டியிருக்கின்றது.

முதலாவது விடயம் ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை மன்னிக்கும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்ட தமிழக அரசு அதனை நிறைவேற்ற மேற்கொண்ட அவசரமான முடிவு.

இரண்டாவது விடயம் தனித்தமிழ் ஈழத்தை உருவாக்கும் வாக்கெடுப்பிற்கு ஆதரவை நல்கும் ஜெயலலிதாவின் தேர்தல் விஞ்ஞாபனம்.

முதலாவது விடயத்தில் தமிழக அரசு மிக அவசரமாக மன்னிப்பு வழங்கும் முடிவை எடுத்தது மத்தியில் கோலோச்சும் காங்கிரஸ் கட்சியை நெஞ்சில் குத்தும் முயற்சியாக இருந்ததே ஒழிய அவ்வாறு மன்னிப்பு வழங்க முயற்சிக்கும் போது எழும் சட்டச் சிக்கல்களை எவ்வாறு தீர்த்துக்கொண்வது என்பதைச் சிந்திக்காது மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகவே கருத வேண்டியுள்ளது.

உண்மையில் அறிவுபூர்வமாகச் சிந்தித்து எவரது உணர்வுகளையும் புண்படுத்தாமல் குற்றஞ்சாட்டப்பட்ட ஏழு பேரையும் அமைதியான சூழலில் விடுவித்திருந்தால் அவர்கள் உண்மையில் விடுதலையாகி இருப்பார்கள். ஆனால் உணர்சிவயப்பட்ட தீர்மானத்தால் இன்று மீண்டும் புதிய வழக்கொன்றை எதிர்கொண்டு அவஸ்தைப்படுகின்றனர் கைதிகள்.

அடுத்து தனித் தமிழீழத்திற்கான தமிழர்களின் வாக்கெடுப்பைக் கோரும் தமிழக தற்போதைய அரசின் தேர்தல் விஞ்ஞாபனமானது தமிழர் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்ட தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு. சம்பந்தன் அவர்களின் "பிளவு படாத நாட்டுக்குள் சுயஆட்சி" என்ற கொள்கையை பலவீனப்படுத்தும் முயற்சியாகவே இருக்கின்றது.

ஏனெனில் தமிழர் தலைமையானது தமிழீழ கோரிக்கையை விடுத்து சுயஆட்சிக் கோரிக்கையை முன்வைத்து நகர்ந்து கொண்டிருக்கும் போது தன்னிச்சையாக, தமிழத் தேசியக் கூட்டமைப்பைக் கலந்தாலோசிக்காமல் ஏன் ? இவ்வாறானதொரு தேர்தல் விஞ்ஞாபனத்தை ஜெயலலிதா முன் வைத்துள்ளார் என்பது கேள்விக்குரியது.

ஈழத் தமிழர்களின் உண்மை நிலைப்பாட்டை கருத்திற்கொள்ளாமலே மேற் போந்த இரு தீர்மானங்களையும் அஅதிமுக கட்சி எடுத்துள்ளது.

எனவே இந்தியத் தமிழர் அரசியலில் ஈழத் தமிழர் தொடர்பான எதேச்சதிகாரத் தீர்மானங்கள் இன்னமும் எடுக்கப்படுகின்றன என்றே தெரிகின்றது.

உணர்ச்சிகளை விடுத்து அறிவுடன் செயற்பட அனைவரையும் வேண்டுவோம்....

## அறநெறிப்பாடசாலை உதயம்

திருகோணமலையில் மிகவும் பின்தங்கியதும், யுத்தத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்டதுமான கப்பல்துறைக் கிராமத்தில் அமைந்துள்ள முத்துமாரியம்மன் ஆலயத்தில் திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலாளர் திருமதி.சசிதேவி ஜலதீபன் அவர்களின் முன்முயற்சியினால் அறநெறிப் பாடசாலையொன்று கடந்த 22.02.2014ல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலர் திருமதி. ஜலதீபன் அவர்களும், கப்பல்துறை வைத்தியசாலையின் வைத்தியர் வைத்திய கலாநிதி திரு. ஜீவராஜ் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

ஐந்து வயது தொடக்கம் பத்து வயதிற்குட்பட்ட சுமார் 50 மாணவர்களுடன் இவ் அறநெறிப்பாடசாலை ஆரம்பிக்கும் வைபவம் அத் தினத்தில் நடைபெற்றது. கடுமையான மதமாற்றம் மற்றும் மதக்கலப்பிற்கு உள்ளாகிவரும் இக்கிராமத்தில் அறநெறிப்பாடசாலையின் வருகை மிக முக்கிமானது எனத் தெரிவித்த கப்பல்துறை மக்கள் பிரதேசச் செயலரின் முயற்சியைப் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

இவ் அறநெறிப்பாடசாலையினை சிறப்பாகக் கொண்டு நடாத்துவதற்கு அம் மாணவர்களுக்குத் தேவையான சைவ சித்திரக் கதைப்புத்தகங்களை பரோபகாரிகள் எவராவது வழங்க முன்வரவேண்டும் எனவும் அவர்கள் மலைமுரசின் ஊடாக வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## முகாம் சிறுமி தற்கொலை



மூதூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பட்டித்திடல் இடைத்தங்கல் முகாமில் 13 வயது சிறுமியொருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிறு காலை 9.00 மணியளவில் பட்டித்திடல் இடைத்தங்கல் முகாமில் வசித்துவரும் சிவஜோதி டிலானி (வயது 13) என்ற மாணவியே தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

விசாரணைகளை மூதூர் காவல்துறை முன்னெடுத்துள்ளது..



அறநெறிப்பாடசாலை ஆரம்பித்து வைக்கும் வைபவம் - கப்பல்துறை - 22.02.2014

# 180,000 இந்திய ரூபாய்த் தண்டத்துடன் 05 திருமலை மீனவர்கள் விடுதலை

இந்தியாவின் காக்கிநாடா பிரதேசத்திற்கு அண்மித்த கடற்பரப்பில் ஊடுருவி "பலநாட் கடற் கல" மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஐந்து திருமலை மீனவர்கள் கடந்த 2013ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 02ஆம் திகதி காக்கிநாடா கடற்படையினரால் கைதுசெயயப்பட்டிருந்தனர். அவர்கள் அன்றைய தினமே காக்கிநாடா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது விளக்கமறியல் தடைக்குட்பட்டிருந்தனர்.

இவ்வாரம் மேற்படி மீனவர்களின் வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்த காக்கிநாடா நீதிமன்ற நீதவான், ஒரு மீனவருக்கு 30,000 இந்திய ரூபாப்படி நான்கு மீனவர்களுக்கும், மாலுமிக்கு 60,000 இந்திய ரூபாவும் தண்டம் விதித்ததுடன், நாடு செல்லவும் அனுமதியளித்தார்.

மேற்படி மீனவர்கள் 5 பேரையும் இலங்கை கடற்படையினரிடம் இந்திய கடற்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒப்படைத்த நிலையில், இவர்களை யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் பொறுப்பேற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

இதன் பின்னர் மேற்படி 5 மீனவர்களையும் கடல் வழியாக திருகோணமலைக்கு கடந்த திங்கட்கிழமை ) அனுப்பி வைத்துள்ளனர்.

## கிண்ணியாவில் 16 பேருக்கு டெங்கு

கிண்ணியா பிரதேசத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை 16 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் 11 பேர் சிறுவர்கள் எனவும் கிண்ணியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.றிஸ்வி தெரிவித்தார்.

கிண்ணியாவில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக பிரதேச அரச அதிகாரிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் நகர சபை கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிண்ணிய நகரசபை தவிசாளர் எம்.எம்.ஹில்மி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், டெங்கு நோய் 2010 ஆம் ஆண்டு கிண்ணியா பிரதேசத்தை முழுமையாக ஆக்கிரமித்தது. அப்போது 497 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு நான்கு பேர் மரணமடைந்தனர். அடப்பனார் வயல் பிரதேசத்தில் இருந்தே இந் நோய்க்காவி பரவியது மக்களின் உதவியின்றி இந்நோயைக் கட்டுப்படுத்த முடியாது எனவே மக்களுக்கு அறிவூட்ட வேண்டும் என்றும் அவர் கூறினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண் சிகிச்சைப் பிரிவு அபிவிருத்திக்கு 17 மில்.

திருகோணமலை பொது வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவை அபிவிருத்தி செய்வற்கு சர்வதேச லயன்ஸ் கழக நிதியம் 17 மில்லியன் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

லயன்ஸ் கழகம், மாவட்டம் 306 சி-1 இன் ஆளுநர் லயன் ஜனரஞ்சன் பாலசிங்கம் சர்வதேச லயன்ஸ் கழக நிதியத்திற்கு முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இந்நிதி வழங்கப்பட்டுள்ளதாக திருகோணமலை நகர லயன்ஸ் கழகத்தின் செயற்றிட்டப் பணிப்பாளர் லயன் உதயசங்கர் பாலசிங்கம் கூறினார்.

இந்நிதியை கொண்டு எதிர்வரும் ஜூன் மாத இறுதிக்குள் வைத்தியசாலையின் கண்சிகிச்சைப்பிரிவு முழுமையான கண் மருத்துவ சிகிச்சைக்கான 24 பிரதான உபகரணங்களைக் கொண்ட சிகிச்சைப் பிரிவாக அபிவிருத்தி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வதைக்கப்படும் சிறுவர்
தொடர்பாக அறிவியுங்கள்
அரசிற்கு - 1929
மலைமுரசிற்கு - 075 4252042

# ஆங்கிலப் பத்திரிகைகள் மீதான பார்வை

## நாட்டை விட்டு வெளியேறும் வைத்தியர் மீது கண்காணிப்பு



நாட்டை விட்டு ஏன் வைத்தியர்கள் வெளியேறுகிறார்கள்? 2013ம் ஆண்டு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தினால், வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு வாய்ப்புக்கள் குறையும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. தனியார், அரச, அரச சார்பற்ற துறைகளில் மட்டங்களுக்கிடையே காணப்படும் சம்பள முரண்பாட்டை நீக்க வேண்டும் என்பதே யாவற்றிற்கும் அடிப்படையானது என சங்கம் மேலும் தெரிவிக்கின்றது. அரசில் கடமையாற்றும் வைத்திய அலுவலர்கள் மாதம் 26,000.்.ஸ்ரீ ரூபாவையும், நிபுணர் ஒருவர் 42,000.்.ஸ்ரீ ரூபாவையும் அடிப்படைச் சம்பளமாகப் பெறுகின்றனர். ஆனால் தனியார் துறையின் வைத்தியர் ஒருவர் 5,00,000.்.ஸ்ரீ ரூபாவை சம்பளமாகப் பெறுகின்றார். இவ் வேறுபாடே பாரிய முரண்பாடுகளை உருவாக்குகின்றது என சங்கம் மேலும் தெரிவிக்கின்றது.

## மேலும் இருவகைப் பால் உற்பத்திகள் கண்காணிப்பில்

இரண்டு பிரபல்யமான பால் உற்பத்திகள் மீது புலனாய்வை மேற்கொள்ளுமாறு நுகர்வோர் அதிகார சபை உத்தரவிட்டுள்ளது. “பெரும்பாலான பல்பொருள் அங்காடிகள் மற்றும் உணவு விடுதிகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் இப்பாற் பொருட்களின் தரம் தொடர்பாக பெருமளவு குற்றச்சாட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து இக்கட்டளை இடப்பட்டுள்ளது.

## கறுப்புப் பணத்தில் வரியற்ற வாகனங்கள்



வரியற்ற வாகன அனுமதிப் பத்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு தம்மிடமுள்ள கறுப்புப் பணத்தைப் பெரும்பாலானவர்கள் பயன்படுத்துவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மத்திய வங்கி மற்றும் சுங்கத் திணைக்கள அலுவலருடன் இவ்விடயம் தொடர்பாக கலந்தாலோசித்ததுடன், மேல் நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர். தற்போது வரியற்ற வாகன அனுமதிச் சீட்டின் விலை 8 இலட்சம் தொடக்கம் 1மில்லியன் வரை விற்பனையாகின்றது. தனி நபர்கள் தமது கறுப்புப் பணத்தைக் கொண்டு பெருமளவு வாகன அனுமதிப் பத்திரங்களை கொள்வனவு செய்வது தெரியவந்துள்ளது.

## ஜெனீவாவின் பின்
## அமைதியடையும் வடமாகாண சபை

வடமாகாண சபைக்கும், மத்திய அரசாங்கத்திற்குமிடையே ஜெனிவா மனித உரிமை சபையின் அமர்வுகளின் பின் நல்லுறவு நிலவும். ஏனெனில், அவ்வமர்வின் பின் வடமாகாண சபையின் கடும் போக்காளர்கள் அமைதியடைவார்கள் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன், அக்கடும் போக்காளர்களும், அவர்களின் பின் இயங்குவோர்களும் திருப்தியடைந்துவிடுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு வேலை வாய்ப்பை ஒழுங்குபடுத்த ஆணைக்குழு



வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை ஒழுங்படுத்தவும், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை ஒழுங்கான முறையில் பெற்றுக் கொள்ளவும் என அதிகார சபை ஒன்றை உருவாக்க அரசு முனைப்புக்களை காட்டி வருகின்றது. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்குப் பதிலீடாக இந்த அமைப்பினை அரசு உருவாக்க முயற்சிக்கின்றது.

# இந்தியாவிற்குத் தேவைப்படும் விடுதலைப் புலிகள்

இராஜீவ் காந்தி கொலை வழக்கில சம்பந்தப்பட்டாதாக குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் விடுதலை என்பது பெரும் அரசியல் முரண்பாடுகளை இந்தியாவில் தோற்று வித்திருக்கும் இந் நேரத்தில் அவர்களை விடுதலை செய்வது இந்திய தேசிய நலனுக்கு ஆபத்தானது என இந்திய மத்திய அரசின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

இக்குறிப்பானது உடனடியாக எவ்வித பின்புலங்களும் இன்றி விடுக்கபட்டிருப்பினும் அதற்கான பின்புலத்தை உடனடியாகவே உருவாக்க இந்திய முனைந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் முடிவு என்பது 2009ல் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் உவப்பாக இருந்ததாயினும் தற்போது விடுதலைப் புலிகளின் தேவை அவ்விரு நாடுகளிற்கும் இன்றியமையாது உள்ளது.

இலங்கையின் சனநாயகப் போக்கில் இயங்கிக் கொண்டிருந்த 'அரசுகள் யாவும்' தமது அராஜக முகத்தை, விடுதலைப் புலிகளை வைத்திருந்ததாலேயே மக்களிடையே கொண்டு செல்லக் கூடியதாக இருந்தது.

கடத்தல்கள், காணாமற் போதல்கள், சுட்டுக் கொலைகள் போன்ற யாவற்றையும் தம்மீதான குற்றங்களாக உருவாக்கிக் கொள்ளும் வாய்ப்பை விடுதலைப் புலிகள் இலங்கை அரசிற்கு தாரை வார்த்திருந்தார்கள்.

ஆனால் 2009ற்குப் பின்னர் அராஜக முகத்தினை அப்பட்டமாக வெளிக்காட்ட முடியாது இலங்கை அரசு திண்டாடி வருகின்றது.



விடுதலைப் புலிகளின ஒரு சிறு பிரிவேனும் விட்டு வைக்கப்பட்டிருந்தால் அதன் பெயரால் அனைத்தையும் முடித்திருக்க முடியும் என இலங்கை அரசிற்குத் தற்போதே விளங்கியுள்ளது. விடுதலைப் புலிகள் உயிர்த்திருந்திருப்பின போர்க்குற்றச்சாட்டையோ அல்லது சர்வதேச விசாரணையையோ அரசின் மீது சுமத்துவதற்கு உலக நாடுகளுக்கு வாய்ப்புக் கிட்டியிருக்காது என்பதுடன் அரசியல் அணியாக தமிழத் தேசியக் கூட்டமைப்பனி இன்றைய கால வளர்ச்சியும் நடந்திருக்காது.

ஆனால் இவ்வாறான வாய்ப்புக்கள் யாவற்றையும் விடுதலைப் புலிகளின் தலைமையின் இறுதி வார்த்தைகள் நிர்மூலமாக்கி விட்டன.

‘‘எமது ஆயுதங்கள் தற்காலிகமாக மௌனிக்கப்படுகின்றன” என்ற வார்த்தைகளின் பின்னர் ஆயதம் ஏந்தியிருப்பது ஒன்றில் அரச படையாகவோ அல்லது அரசபடைகளுக்கு நெருக்கமான தமிழப் படைகளாகவோ இருந்துவருகின்றதேயொழிய விடுதலைப் புலிகளை எந்த இடத்திலும் செருக முடியவில்லை.

எனினும் அந்த இறுதி வாசகத்தைச் சரியாகப் புரிந்து கொண்ட அரசு “தற்காலிகமாக” என்னும் வார்த்தையை அந்த வாசகத்திலிருந்து கருத்திற் கொண்டது. அதன்படி நிரந்தரமாக ஆயுதங்கள் மௌனிக்கப்படவில்லை என்பதலால் விடுதலைப் புலிகளை உருவாக்கும் சில முயற்சிகளில் அரசே ஈடுபட்டது என்ற சந்தேகங்கள் பரவலாக எழுந்தன. எனினும் அம்முயற்சிகள் யாவும் தோல்வியடையவே இறுதியாக விடுதலைப் புலிகளின் திருகோணமலைக் கட்டளைத் தளபதி பதுமன் மீண்டும் புலிகளை உருவாக்க முயற்சிக்கின்றார் என்னும் இறுதிப் புயலொன்றையும் ஊடகங்கள் கிளப்பிப்பர்த்தன உரிய அமைப்புக்கள். அம்முயற்சியும் தற்போதுவரை வெடிக்காத சரவெடியாகவே உள்ளது.

இச்சந்தர்ப்பத்தில்தான் இந்தியா கடுமையானதொரு அரசியல் நெருக்கடியை தமிழநாட்டில் இருந்து பெற்றுக்கொள்ளத் தொடங்கியுள்ளது.

விடுதலைப் புலிகள் பலமாக இருந்த வேளையில் முன்னாள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் கருணாநிதியுடன் இணைந்து தற்போதைய முதலமைச்சருக்கு உயிராபத்தை ஏற்படுத்தியியருந்தார்கள் என்ற செய்தியை இந்திய உளவுத்துறை ஜெயலலிதா அம்மையாருக்கு வழங்கியிருந்தது.

அச் செய்தியின் பின்னர் புலிகளை ஒழித்துவிடும் கட்சியில் இருந்த ஜெயலலிதா அம்மையார் 2009 மே மாதத்தின் பின்னர் தமிழ்நாட்டில் எழுந்த ஈழத் தமிழர் ஆதரவைக் கண்டு தமிழர் சார்புக் கொள்கையைக் கையில் எடுத்தார்.

அக் கொள்கை மத்திய அரசின் இலங்கை தொடர்பான நலன்களுக்கும், உறவுக்கும் எதிரானதாக [illegible].

இதனால் மத்திய அரசு நேரடியாக மாநில அரசுடன் முரண்படும் நிலையைத் தோற்றுவித்த காரணிகள் பலவற்றுள் ஒன்றாக தமிழ மக்கள் சாபுக் கொள்கை இருந்து வருகின்றது.

அச்சார்புக் கொள்கையின் இறுதி வெளிப்பாடாகவும், பெரும் சர்சையை ஏற்படுத்திய நடவடிக்கை ஒன்றாகவும் இருந்ததே ராஜீவ் காந்தி கொலைவழக்கின் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்யும் மாநில அரசின் முடிவாகும்.

இதனைத் தொடர்ந்து விழித்துக் கொண்டு மத்திய அரசும் இராணுவ ஆலொசனைக் குழுக்களும் விடுதலைப் புலிகளின் மீள் வருகையை ஏதாவதொரு விதத்தில் உருவாக்கிக் கொள்ள முயற்சிக்கின்றனர்.



அதன் வெளிப்பாடே கடந்த சில நாட்களுக்கு முன் வெளியான செய்தி- அந்தமான் நிக்கோபார் தீவுகளில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தடையின்றிப் புகலிடம் தேடவும் தமது அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அத் தீவுக்ககூட்டங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பு பெருமளவு உள்ளது எனத் தெரிவித்துள்ளது.

இச் செய்தியின் ஊடாக இரண்டு உடனடி நன்மைகளை மத்திய அரசு எதிர்பார்ப்பது போல் தெரிகின்றது.

முதலாவது ராஜீவ் கொலைக்குற்றவாளிகளை விடுவிப்பது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்ற கூற்றை ஆதரப்படுத்துவதாக இருக்கின்றது. அதாவது விடுவிக்கப்படுபவர்கள் சிதறிக் கிடக்கும் விடுதலைப் புலிகளை சேர்த்தியக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வதுடன் அதற்கு தமிழ்நாட்டையே அவர்கள் களமாகக் கொள்ளும் வாய்ப்பையும் பெற்றிருக்கின்றனர் என்ற தோற்றத்தை உருவாக்குவது.

இரண்டாவது புலிகளின் மீள் உருவாக்கம் தமிழ்நாட்டின் முதலமைச்சருக்கு உயிராபத்தை மீண்டும் உருவாக்கிவிட்டுள்ளது என்ற சேய்தியை அவருக்குக் கொடுப்பதன் ஊடாக மீண்டும் அவருடனான நல்லுறவுகளை உருவாக்க ஏதவான காரணிகளில் ஒன்றாக அதனைப் பயன்படுத்துவதும் ஆகம்.

ஆக மொத்தம் இந்தியாவிற்கும் விடுதலைப்

ஞாயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிற்கு ஏன் இந்த வஞ்சனை



- சஞ்சயன் -

வடக்கு மாகாணசபையில் கடந்தவாரம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று, எந்தவித அர்த்தமும் இல்லாத வகையில், தெற்கில் சர்ச்சைக்குரிய விவகாரமாக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையில், மீண்டும் கப்பல் சேவையையும், பலாலியில் இருந்து தமிழ்நாட்டுக்கு விமான சேவையையும் மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரும் தீர்மானமே அது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் சர்வேஸ்வரனால் கொண்டு வரப்பட்ட இந்த தீர்மானம் ஒன்றும், சட்டவிரோதமானதோ தேசவிரோதமானதோ அல்ல.

ஆனாலும், தெற்கில் அரசாங்க அமைச்சர்களும் அரசியல் கட்சிகளும் இதற்கெதிராக கிளப்பியுள்ள எதிர்ப்பு விந்தையானது. இந்த விவகாரம், இரண்டு விடயங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

எதையுமே ஆராய்ந்து பாராமல், எடுத்த எடுப்பில் வடக்கிலுள்ள மக்களினதும் நிர்வாகத்தினதும் கோரிக்கைகளை தவறான கண்ணோட்டத்துடனும் விளங்காத்தனத்துடனும் பார்ப்பது முதலாவது. வடக்கு என்பது எந்த அபிவிருத்தியுமின்றி, முடக்கப்பட்டிருக்க வேண்டும், எதற்கும் தெற்கையே சார்ந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் சிங்கள அரசியல் தலைமைகளிடம் இருந்து நீங்கவில்லை என்பது இரண்டாவது.

வடக்கு மாகாணசபை அமைக்கப்பட்ட காலத்தில் இருந்தே, தெற்கிலுள்ள சிங்களத் தேசியவாத சக்திகள் அதனை விரோதமாகப் பார்க்கத் தொடங்கினர். வடக்கு மாகாணசபையை வைத்து தமிழர்கள் தனிநாடு ஒன்றைப் பெற்று விடுவார்கள் என்று, சிங்களத் தேசியவாத சக்திகள் பிரசாரம் செய்து வந்தன.

இந்த சந்தேகம் அவர்களிடம் ஏற்பட்டதற்கு, தனியே அவர்களின் இனவாதக் கொள்கையை மட்டும் காரணமாக சொல்ல முடியாது.

1988இல் வட-கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னர், இந்திய அமைதிப்படையின் துணையுடன் ஆட்சியை நடத்திய வரதராஜப்பெருமாள் தலைமையிலான அரசு, 1990இல் இந்தியப் படையினர் வெளியேறிய போது, தமிழீழப் பிரகடனம் செய்து விட்டுச் சென்றிருந்தது.

அதுபோன்று வடக்கு மாகாணசபையும், தமிழீழத்தைப் பிரகடனம் செய்து விடலாம் என்ற சந்தேகம், தெற்கிலுள்ள மக்களில் சிலருக்கு இன்னமும் இருப்பதை மறுக்க முடியாது.

வடக்கு மாகாணசபையால், மத்திய அரசாங்கத்தை மீறி எதையும் செய்து விட முடியாது என்பதை அறிந்திருந்தும், சிங்களத் தேசியவாத சக்திகள், இதனை ஒரு பேராபத்தாக பிரசாரம் செய்து, இந்த தவறான கருத்தை சிங்கள மக்களிடையே ஏற்படுத்தியுள்ளன.

அதேவேளை, மத்திய அரசாங்கத்தை மீறி வடக்கு மாகாணசபையால், எதையும் செய்ய முடியாது என்ற உண்மையை அரசாங்கம் மக்களுக்குத் தெளிவுபடுத்தத் தவறியதுடன், சிங்களத் தேசியவாத சக்திகளின் பிரசாரங்களுக்கு அது ஊக்கம் கொடுத்தும் வந்தது.

இதனால், வடக்கு மாகாணசபையின் எல்லா நகர்வுகளையுமே சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதும், அதனை வைத்து அரசியல் நடத்துவதும் வழக்கமாகி விட்டது.

அதுபோலவே, சிங்கள அரசியல் தலைமைகள், இப்போது என்ன ஏதென்று கேள்விக்கிடமின்றி, வடக்கு மாகாணசபை எதைச் செய்தாலும், அதை குரோத எண்ணத்துடன் பார்ப்பதும் வழக்கமாகி விட்டது.

அதன் காரணமாகவே, இந்த தீர்மானமும் சர்ச்சைக்குரியதாக்கப்பட்டுள்ளது.

உண்மையில், வடக்கு மாகாணசபை நிறைவேற்றிய தீர்மானத்துக்கும், தெற்கிலுள்ள இனவாத சக்திகளும் அரசாங்கமும் எம்பிக் குதிப்பற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

தமிழ்நாட்டுக்கும், வடக்கு மாகாணத்துக்கும் இடையில் விமான, கப்பல் சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை, வடக்கு மாகாணம் தனியான கப்பல், விமான சேவையை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளதாக சிங்களத் தேசியவாதிகளால் அர்த்தப்படுத்தப்பட்டது மிகவும் அபத்தமானதொரு செயல்.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கார ஜெயரத்ன, மூன்றாவது சர்வதேச விமான நிலையத்தை அமைக்கும் எண்ணம் அரசாங்கத்துக்குக் கிடையாது என்று கூறினார்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவோ, விமான நிலையங்களும் துறைமுகங்களும் 13ஆவது திருத்தச்சட்டத்தில் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டவை, வடக்கு மாகாணசபை இதற்கு உரிமை கோர முடியாது என்றார்.

சிங்களத் தேசியவாத அரசியல் தலைவர்களான விமல் வீரவன்ச, குணதாச அமரசேகர, சம்பிக்க ரணவக்க, உதய கம்மன்பில, வசந்த பண்டார போன்றவர்கள், நாட்டைப் பிரிக்க வடக்கு மாகாணசபை முனைவதாகவும், இது நாட்டின் இறைமைக்கு ஆபத்தானது என்றும் கூச்சல் போட்டனர்.

அதுமட்டுமன்றி, வடக்கு மாகாணசபையைக் கலைக்க வேண்டும் என்றும் இவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனை ஒரு காரணமாகக் காட்டி, வடக்கு மாகாணசபையைக் கலைக்கக் கோரும் அளவுக்கு இந்த தீர்மானத்தில் எதுவும் இல்லை என்று தெரியாதளவுக்கு சிங்களத் தேசியவாத தலைமைகள் நுனிப்புல் மேய்பவர்களாகவே இருக்கின்றனரா?

அல்லது, கிடைக்கும் சந்தர்ப்பங்களையெல்லாம் தமிழர்களுக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றனரா?

எது எவ்வாறாயினும், வடக்கு மாகாணசபையின் தீர்மானம் தொடர்பாக, அரசாங்கத் தரப்பில் இருந்தும் சிங்களத் தேசியவாதிகளிடம் இருந்தும் எழுந்துள்ள எதிர்ப்புகளை அவதானிக்கும் போது, வடக்கிலுள்ள தமிழர்களின் உரிமையை அவர்கள் எந்தளவுக்கு அங்கீகரிக்க மறுக்கிறார்கள் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

அதுவும், வடக்கில் உள்ள மக்கள் தமது பிரதேசத்துக்கென ஒரு சர்வதேச விமான நிலையத்தைக் கோருவதற்கும் உரிமையற்றவர்கள் என்று அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இது ஒன்றும் புதிதாக முன்வைக்கப்பட்ட அல்லது நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கையன்று.

ஹம்பாந்தோட்டையில் ஒரு சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டு, வெளிநாடுகளுக்கான சேவையை நடத்த முடியுமென்றால், வடக்கில் மட்டும் ஏன் அதைச் செய்ய முடியாது என்ற கேள்வி எழுவது இயல்பு.

முன்னர், பலாலியில் இருந்து திருச்சிக்கும் சென்னைக்கும் விமான சேவைகள் நடத்தப்பட்டிருந்ததும், இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையில் இராமானுஜம் என்ற கப்பல் சேவை நடத்தப்பட்டதும் எவருக்கும் மறந்து போயிருக்காது.

பலாலிக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையிலான விமானசேவை, 1970களின் இறுதியுடனும், கப்பல் சேவை 1980களின் நடுப்பகுதியுடனும் தான் நிறுத்தப்பட்டன.

அமைதியற்ற சூழலை காரணம் காட்டி, இடைநிறுத்தப்பட்ட கப்பல் மற்றும் விமான சேவைகளை மீள ஆரம்பிக்கக் கோருவது எந்தவகையில் தவறானது?

தமிழ்நாட்டுக்கும் வடக்கிற்கும் இடையில், இலங்கை அரசாங்கம் நிறுவப்பட முன்னரே, நெடுங்கால வணிகத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன.

இப்போது இந்த சேவைகளை ஆரம்பிப்பதன் மூலம், இந்த வணிகத் தொடர்புகளைப் பலப்படுத்தி, வடக்கை மேலும் அபிவிருத்தி செய்யலாம் என்பது அரசாங்கம் அறியாத ஒன்றாக இருக்க முடியாது.

ஆனாலும், இதனை தவறான கோரிக்கையாக அரசாங்கமே முன்னிலைப்படுத்தியுள்ளது, வடக்கை வஞ்சிக்கும் செயலாகவே கருத வேண்டும்.

தெற்கிலுள்ள மக்களுக்கு, கட்டுநாயக்க விமான நிலையம் தொலைவாக இருக்கிறது என்பதற்காக, ஹம்பாந்தோட்டையில் ஒரு சர்வதேச விமான நிலையத்தை அமைத்த அரசாங்கத்துக்கு, அதேபோன்று தொலைவில் உள்ள வடக்கிலுள்ள மக்களின் வசதி கருதி, பலாலியில் இருந்து விமான சேவையை ஆரம்பிக்க விடுக்கும் கோரிக்கை மட்டும் நியாயமற்றதாகத் தெரிகிறது.

இது உணர்த்துவது, வடக்கு எப்போதும் தெற்கின் கீழ் இருக்க வேண்டும் என்பதையா - வடக்கு அபிவிருத்தி செய்யப்படக் கூடாது என்பதையா- வடக்கிற்கு எந்த அதிகாரப்பகிர்வும் வழங்கப்படக்கூடாது என்பதையா- அல்லது இவை அனைத்தையுமா?

இத்தகைய குரோத எண்ணங்கள் தூண்டி விடப்பட்டதன் விளைவைத் தான் நாடு மூன்று தசாப்தங்களாக அனுபவிக்க நேரிட்டது.

அந்த வலியில் இருந்து மீள்வதற்கிடையில், மீண்டும் அதே சிந்தனைகள் தூண்டி விடப்படுவது, நிலையான அமைதியையோ - நல்லிணக்க சூழலையோ உருவாக்க இடமளிக்காது.

இந்த உண்மை தெற்கிலுள்ள அரசியல்வாதிகளுக்கு புரியவில்லையா அல்லது அவர்கள் அதைப் புரிந்துகொள்ள விரும்பவில்லையா?

(நன்றி- தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளக்கோட்டன் என்னும் தர்ம சீலன்

- பகுதி 04 -

## கடந்த வார தொடர்ச்சி. . .

குளக்கோட்டன் என்னும் தர்ம சீலன் ஆற்றிய பணி இன்றும் திருகோணமலை தொடக்கம் திருக்கோயில் வரை ஒருவித குறைபாடுகளுமின்றி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கால மாற்றத்தினால் சொல்லமுடியாத அளவுக்கு இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் துன்பங்களை அனுபவித்து வந்த போதும் அவற்றினைக் கைவிடாமை குறிப்பிடத்தக்கதாகும்.



மன்னர்கள் அண்டை நாடுகளைக் கைப்பற்றுவதும் தமது ஆட்சிக்குட்படுத்துவதும் பின்னர் அவற்றை விட்டு செல்வதும் வழமை என்பது வரலாறு. இருந்தும் குளக்கோட்டன் என்னும் தர்மசீலன் ஆற்றிய பணியானது இன்றுவரை மக்கள் அவனை மறக்காமல் ஒரு தெய்வீக புருசனாகப் போற்றி வணங்கச் செய்திருக்கிறது.

திருக்கோணேஸ்வரம், தம்பலகாமம், வெருகல், கொக்கட்டிச்சோலை ,திருக்கோயில் போன்ற இடங்களில் அவன் அமைத்த கோயில்கள் சிறப்பாகச் செயற்பட்டு இற்றைவரை ஆன்மிகப் பணியை மிகச்சிறப்பாகச் செய்து வருகின்றன.

திருகோணேஸ்வரத்தில் அவன் திருவுருவச் சிலை கம்பீரமாக காட்சியளிக்கிறது. மக்கள் அவன்சேவைக்கு மகுடம் சூட்டுவது போல பாடசாலைகளுக்கு, நூலகங்களுக்கு, பூங்காக்களுக்கு, நிறுவனங்களுக்கு 'குளக்கோட்டன் ' எனப் பெயர் சூட்டி வாழ்த்தி வணங்கி வருகிறார்கள்.

குளக்கோட்டன் திருப்பணி செய்த திருக்கோணேஸ்வரம் இருக்கும் வரை தமது சமயத்தைப் பரப்ப முடியாது என்பதைப் புரிந்து கொண்ட போர்த்துக்கீசர் அந்த ஆலயத்தை இடித்துத் தரைமட்டமாக்கினர். இதனை முற்கூட்டியே அறிந்து கொண்ட தொழும்பாளர்கள் கோணேசர் திருவுருவையும் ஏனைய விக்கிரகங்களையும் நிலத்தில் புதைத்து வைத்தும், தம்பலகாமத்திலுள்ள களனி மலையில் கோணேப்பெருமானை வைத்து இரகசியமாகப் பூசித்தும் வந்தனர்.

பின்னர் இத்திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டு இன்று திருகோணமலையில் கோணேஸ்வர ஆலயம் மிகச்சிறந்த நிலையில் தனது பணிகளை ஆற்றி வருகிறது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

இதே போல களனிமலையில் வைத்து வணங்கப்பட்டு வந்த ஆதிகோணநாயகர் திருவுருவை கண்டியிலிருந்து அரசு செய்த இராசசிங்கன் என்னும் மன்னன் இற்றைக்கு இருநூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தம்பலகாமத்தில் தற்போதுள்ள ஆலயத்தை கட்டிமுடித்து கோணநாயகர் திருவுருவையும் ஏனைய பரிவாரத் தெய்வங்களையும் பிரதிஷ்டை செய்து குளக்கோட்டன் காலத்திலிருந்ததைப் போல சகல காரியங்களும் நடைபெறவேண்டும் என ஆணையிட்டு கண்டிக்குச் சென்று தனது நல்லாட்சியை தொடர்ந்தனன் என திருகோணாசல வைபவம் என்ற நூல் கூறுகிறது.

தனக்கென வாழாது தனது நாட்டு மக்களுக்காக அவர்களது நல் வாழ்வுக்காக அல்லும் பகலும் சிந்தித்து கோணநாயகர் வழிபாட்டை தன் மக்களுக்கு வழங்கி அவ்வழிபாட்டிற்கான சகல மானியங்கயையும் கொடுத்து வழிபாடு சிறப்புற்றோங்குவதற்கான சிறந்த கட்டமைப்பையும் உருவாக்கி தன் கடமையில் தன்னிறைவு கண்ட குளக்கோட்டு மாமன்னன் இன்றும் என்றும் தன்னிகரற்ற தர்ம சீலனாக மக்கள் மத்தியில் பிரகாசிப்பான்.

### உசாத்துணை நூல்கள்


1. கோணேஸ்வரம். திரு. க.குணராசா.
2.திரிகோணாசலப் புராணம். முத்துக்குமாரசாமிப்பிள்ளை. பிப்பு அழகக்கோன் 1950.
1.. யாழ்ப்பாண வைபவமாலை. மாதகல் மயில்வாகனப் புலவர் பதிப்பு. கலாநிதி .க.குணராசா.
4. யாழ்ப்பாணச் சரித்திரம். செ.இராசநாயகம். புதிப்பு. 1999.
5. வரலாறறுத்திருகோணமலை. கனகசபாபதி சரவணபவன். புதிப்பு.2003.
6. குளக்கோட்டன் தரிசனம். செல்வி க.தங்கேஸ்வரி. பதிப்பு. 1993.


-முற்றும்-

வே. தங்கராசா
தம்பலகமம்

# இப்படியும் நடக்கலாம் !!!

## கடந்த வாரத் தொடர்ச்சி. . .

மேலும் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒருவர் எவ்விதம் தனது தொழில் வழங்குநர் ஊடாக வழக்கு தாக்கல் செய்வது? என்ற கேள்வியை விண்ணப்பதாரியின் சார்பில் தோன்றிய சட்டத்தரணி கேட்க மறக்கவில்லை. அத்துடன் வேலை நீக்கம் செய்யப்பட்டவர் சட்ட உதவியை நாடி மீண்டும் தனது தொழிலை ஏன் பெறக்கூடாது? ஏன்பதும் அங்கு விவாதமாக இருந்தது.

ஒருவருக்கு பதவி வழங்கப்பட்டு அப் பதவியை உறுதிப்படுத்துவதற்காக மூன்று வருட நன்நடத்தைக் காலம் எங்கும் வழங்கப்படுவது சகஜம். அவ்விதம் குறித்த ஊழியருக்கும் வழங்கப்பட்டிருந்தது. அந்த காலகட்டத்தில் நிறுவனம் போலி ஆவணப் பிரச்சினையை முன்வைக்க தவறிவிட்டு, சுமார் 17 வருடங்களுக்குப் பின் அப்பிரச்சினையின் நிமித்தம் ஒருவரை முற்றாக வேலையிலிருந்து நீக்குவது மனிதாபிமானத்திற்கு முற்றாக எதிரானதாகும்.

குறித்த மூன்று வருட காலத்தில் ஊழியர் ஒருவரின் நடத்தை, நேர்மை, ஒழுக்கம், கடமை உணர்வு ஆகியவற்றை நன்கு அலசி ஆராய்ந்ததன் பின்னரே அவர் சேவையில் உறுதிப்படுத்தப்படுகிறார். ஆவ்விதம் இருக்கையில் இன்று அவனுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அடிப்படையற்றதாகும். அத்துடன் அவனது பெயரில் பதியப்பட்ட உண்மையான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டபோது அதை பரிசீலனை செய்து அதன் உண்மை நிலையை அறியாது அமைதியாக இருப்பது மேலும் பல சந்தேகங்களை கிளப்பியுள்ளது.

அவனுடைய சேவை திருப்தி என்பதாலும் அவனிடம் எந்த குறைபாடும் காணாததாலும் உயர் அதிகாரிகளின் பரிந்துரையின் பேரிலே அடுத்த நடவடிக்கையாக அவன் சேவையில் உறுதி செய்யப்பட்டுள்ளான். ஆவ்வாறிருக்க நீண்டகால சேவைக்கு பின் அவன் சேவையில் இருந்து நீக்கப்படின் சுமார் 40 வயதுடைய அவன் பிறிதொரு வேலையை தேடிக்கொள்வது இன்றைய காலகட்டத்தில் இயலுமான காரியமா? ஏன்பதனை குறித்த நிறுவனம் ஏன் சிந்திக்க தவறியதோ தெரியவில்லை.

### ...நாட்டு நடப்பு...

ஊழியர் ஒருவரின் குறைபாடுகளை கண்டுபிடிப்பதற்காகவே மூன்று வருட தகுதிகாண் காலம் வழங்கப்படுகிறது. ஆக்கால கட்டத்தில் அவ்விதமான தவறுகளை, குறைபாடுகளை கண்டுபிடிக்க தவறியது நிர்வாகமே. எனவே நிர்வாகத்திற்கு எதிராக ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடாது என்ற கேள்வியும் அங்கு எழுகின்றது.

எது என்னவாக இருந்தாலும் தற்பொழுது குடும்பஸ்தன் என்ற நிலைக்குள்ளாகி பல எதிர்பார்ப்புக்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அவனையும் அவன் குடும்பத்தையும் நடு வீதிக்கு கொண்டு சென்று விடாது அரவணைத்து பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு குறித்த நிறுவனத்தின் கரங்களிலே தங்கியுள்ளது.

முற்றும்!!

பாலையூற்றான்

# 10 வயது குள்ள மனிதன்

10 வயதான சிறுவனொருவன் தனது பெற்றோருக்குத் தெரியாமல் அவர்களின் காரை செலுத்திச் சென்ற வேளை பொலிஸார் சோதனையிட்டபோது தான் குள்ளமான ஒரு மனிதன் எனவும் சாரதி அனுமதிப்பத்திரத்தை வீட்டில் மறதியாக வைத்துவிட்டு வந்ததாகவும் கூறிய சம்பவம் நோர்வேயில் இடம்பெறுள்ளது.

ஒரு நாள் காலை 6 மணியளவில் வீட்டிலிருந்து தனது 18 மாத தங்கையையும் ஏற்றிக் கொண்டு காரில் தனது தாத்தா பாட்டியின் வீடைநோக்கி புறப்பட்டான். அவ்வேளையில் அச்சிறுவனின் பெற்றோர் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தனராம்.

இச்சிறுவன் 10 கி.மீற்றருக்கும் அதிகமான தூரத்தை கடந்து சென்றுகொண்டிருந்த வேளையில் வீதியில் ஒருவர் சிறுவன் காரை செலுத்துவதை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார்.

அதையடுத்து பொலிஸார் அக்காரை மறித்து சோதனையிட்டபோது, தனது வயதை மறைத்த அச்சிறுவன், தான் வளர்ச்சி குறைந்த குள்ள மனிதன் எனவும் தனது சாரதி அனுமத்திப்பத்திரத்தை எடுத்துவர மறந்துவிட்டதாகவும் கூறினான். இதேவேளை வீட்டில் பெற்றோர் தமது பிள்ளைகளையும் காரையும் காணாமல் தவித்தாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



# வீட்டில் இளைப்பாறிய திருடன்

இங்கிலாந்திலுள்ள வெஸ்ட் போர்க்ஷிர் என்ற இடத்தில் பூட்டியிருந்த வீட்டுக்குள் 22 வயதான குஷருக் என்ற கொள்ளையன் புகுந்தான். அவன் அங்கிருந்த பொருட்கள் நகை மற்றும் பணத்தை கொள்ளையடித்து மூட்டை கட்டினான். நீண்ட நேரமாக இச்செயலில் ஈடுபட்டதால் மிகவும் களைப்படைந்தான். அதை தொடர்ந்து வீட்டில் இருந்த படுக்கையில் படுத்து அயர்ந்து குறட்டை விட்டு தூங்கி விட்டான்.

இதற்கிடையே வீட்டு உரிமையாளர் திரும்பி வந்து விட்டார். தூங்கும் திருடனை பார்த்த அவர் காவல்துறைக்கு தகவல் கொடுத்தார். காவல்துறை கொள்ளையன் குஷருக்கை கைது செய்தனர். அவன் மீது நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு 18 மாத சிறைத்தண்டனையும் கிடைத்தது அவனுக்கு.

# வளர்ந்துவரும் நாய்!

7 அடி 1 இஞ்ச் உயரத்தில் பிரிட்டனின் மிக உயரமான நாய் ஒன்றை வளர்த்து வருகிறார் Claire Stoneman என்ற பெண். காலில் இருந்து தோள் வரை சுமார் 41 இன்ச் உயரம் உள்ள இந்த நாய், கின்னஸ் சாதனை புரிய இன்னும் மூன்று இன்ச் உயரமே தேவைப்படுகிறது. தற்போது Zeus என்ற நாய் 44 இன்ச் உயரத்தில் கின்னஸ் சாதனை பெற்று விளங்குகிறது. இந்த நாயின் உணவுக்கு மட்டும் வாரம் ஒன்றுக்கு 75 பவுண்டுகள் செலவு செய்வதாக இதன் உரிமையாளர் கூறுகிறார். இந்த நாய் இன்னும் வளர்ந்து கொண்டிருப்பதாகவும், அனேகமாக இன்னும் ஒரு மாதத்தில் கின்னஸ் சாதனைக்கு தேவையான வளர்ச்சியை பெற்றுவிடும் என்றும் கூறியுள்ளார். இந்த நாய் இவருடைய வீட்டில் உள்ள 14 சோபாக்களை இதுவரை நாசமாக்கியுள்ளதாகவும் அவர் வருத்தத்துடன் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தோசையும் தொட்டுக் கொள்ள நான்கு மாத்திரைகளும் !!

சிறுகதை
பாகம் - 02

வாங்கிக் கொண்டு, எல்லோரும் ஏறி வண்டியில் அமர, சுகுமார் ஸ்கூட்டரில் அவர்களுக்கு முன்பாகப் பறந்தான். அப்பா சுதர்மனின் மடியில் சாய்ந்தவாறு படுத்துக்கொள்ள, பிரேமா வண்டி எடுத்தாள் கொஞ்ச தூரம் போனதும் நிறுத்தி -

"என்னங்க வண்டிய நீங்க ஓட்டுங்க, நான் பார்வதிக்கும், ரம்யாக்கும் பேசி விவரம் சொல்லிட்றேன்."

"நீங்க இருங்கண்ணே நான் ஓட்றேன், இல்லைன்னா அண்ணி போன் கொடுங்க நான் அவுங்களுக்கு சொல்லிட்றேன், நீங்க ஓட்டுங்க."

"ஏன்டா உன் போனெங்கே..."

"அவசரத்துல வந்துட்டண்ணே, மேல இருக்கும்."

"சரி இந்தா இதுல பண்ணு."



அவன் அலைபேசியை வாங்கி வீட்டில் பார்வதிக்கும், ரம்யாவிற்கும் விவரம் சொல்லிவிட்டு சுதர்மனிடம் தர, அப்பா அயர்ந்து படுத்திருந்தார், எல்லோரும் தனக்குத் தானே ஏதேதோ யோசித்தவாறு அமைதியாக இருந்தனர். சற்று நேரத்திற்கெல்லாம் அப்பா லேசாக வாயைத் திறந்து பேசத் துவங்கினார்.

"டாக்டர் சொன்னதும் தவறில்லை சுதர்மா..."

"ஏன்பா?"

"நான் ஆரம்பத்துல எல்லாம் ஒழுங்காவே இல்லைதானே. குடிப்பேன், பாக்கு போடுவேன், நேரத்துக்கு சாப்பிட மாட்டேன், புகை பிடிப்பேன், சரியா தூங்க மாட்டேன்."

"நாங்க அப்படி பார்த்ததே இல்லையேப்பா.."

"ஒரு கட்டத்துல தவறுன்னு தெரிய மாத்திக்கிட்டேன்பா. இன்னும் சொல்லப் போனா, உங்கம்மா வந்துதான் முழுசா மாத்தினாள், மகராசி அவளும் போய்ட்டா. நீங்க எல்லாம் வயசுல ஒழுக்கமா இருக்கீங்கப்பா, உங்களுக்கெல்லாம் பிற்காலத்துல ஒரு நோய் நொடியும் இருக்காது."

"உங்களுக்கென்னப்பா குறை.. நாங்கலாம் இருக்கோமே."

"நீங்கல்லாம் இருந்தாலும் எனக்கு உப்பில்லாச் சோறு தானே ராஜா?"

"இல்லைப்பா டாக்டர் கோதுமைல வேணும்னா எண்ணெய் ஊத்தாம தோசை எல்லாம் சுட்டு தரலாம்னு சொன்னாருப்பா."

பிரேமா சொல்ல சிரித்துக் கொண்டார் துரை சாமி. "என்ன, ஒரு தோசையும் தொட்டுக்க நாலு மாத்திரையும்" கொடுக்க சொன்னாரா?"

அவர் சொல்லிவிட்டு சிரிக்க, யாருக்கும் சிரிக்கத் தோணவில்லை. அப்பாவை நினைத்து மனதால் வருந்தின அந்த பிள்ளைகள். தன்னால் முடிந்தால் கூட நோயைத்தான் ஏற்றுக் கொண்டு அப்பாவை நோகாமல் பார்த்துக் கொண்டிருக்கும். முடியாத மனங்கள் கண்ணீரால் நனைந்தன. வாகனம் விரைந்து வீட்டை நோக்கிப் போனது.

ராஜா அப்பாவின் ஒரு கையை பாசமாக எடுத்து தன் மடியில் வைத்து அழுந்தப் பிடித்துக் கொண்டான்.

அப்பா அவனையே பார்த்துக் கொண்டு வந்தார். இருட்டை கிழித்துக் கொண்டு தெருவில் அடித்த வண்டியின் வெளிச்சத்தை கடந்து வாகனம் வீடு நோக்கிப் போக, இரவு நேரத்தின் நிலா மேலிருந்து "தாய் தந்தையைக் கவனித்திடாத பிள்ளைகளுக்கு உதாரணமாய் இவர்களை காட்ட தன் வெளிச்சத்தில் குறித்துக் கொண்டது.

திடீரென மார்பு மீண்டும் அடைத்தது அவருக்கு. மாத்திரை வாங்கிப் போடவோ வெளியில் சொல்லவோ முயற்சிக்கிறார் இயலவில்லை. மேலும் தீவிரமாய் நெஞ்சை இழுத்துப் பிடிக்கிறது. ஓரிரு நொடியில் முகம் புடைத்து வியர்க்கிறது. முகத்தை துடைத்துக் கொண்டு கவிழ்ந்தார் போல் படுத்துக் கொண்டார். கைகால்களை எட்டியுதைத்து படபடவென அடித்துக்கொள்ளத் தோன்றுகிறது இப்படிப்பட்ட செல்வங்களை மேலும் மேலும் தொந்தரவு செய்வானேன், என்றாயினும் போகும் உயிர்தானே போகட்டுமென்று எண்ணிக்கொள்கிறார்.

மார்பு அடைக்க அடைக்க கைகால்கள் விரைக்கினறன. கால்களை இறுக்கி இடுக்கிக்கொள்கிறார். உள்ளூர நாக்கை கடித்துக்கொள்கிறார். எல்லாம் அவஸ்தையையும் தன் பிள்ளைகளுக்கு தெரியவேண்டாமேயென்று தனக்குள்ளேயே தாங்கிக்கொள்கிறது அந்த ஜீவன். அவர்கள் அப்பா முடியமால் கண்ணயர்ந்துப் படுத்திருப்பதாய் மட்டுமே அறிகிறார்கள்.

அவரின் உதடு மட்டும் சுதர்மனை எண்ணி முணுமுணுத்தன. கையினால் ராஜாவை அழுத்தமாகப் பற்றிப் பிடித்துக் கொண்டார். பேரப் பிள்ளைகள் பார்வதி, ரம்யா எல்லோரையும் நினைத்துக் கொண்டார். மேலும் தீவிரமாக அடைக்க உடல் முழுக்கப் பரவிய மரணவலியால் துடிதுடிக்கத் தோன்றியது. அடக்கிக் கொண்டு லேசாக கண்திறந்து பிரேமாவை பார்த்துக் கொண்டார்.

சுகுமாருக்கு ஒரு குழந்தை பிறந்து பார்க்கவே இல்லையே என்று எண்ணுகையில் கண்ணீரின் ஒரு துளி கன்னத்தில் வழிந்தது. மனைவியையும் பெற்றோரையும் நன்றியோடு நினைத்துக் கொண்டார். கண்மூடிக் கொண்டே இன்னொரு கையினால் எட்டி சுதர்மனைப் பிடித்துக்கொள்ள சுதர்மன் அவரை சற்று தூக்கி சரியாக படுக்க வைக்க "உயிர் சடாரெனப் பிரிந்து அவருக்குத் தெரியாமல் நின்றுவிட்ட அவரின் இதயத்தின் மீதேறி வெளியே போனது.



அது தெரியாமல் எல்லோரும் அப்பாவை நினைத்துக் கொண்டே வீடு போயினர். வீடு அழுகையில் நிறையும் முன் குழந்தைகளின் புன்னகையில் சற்று சிரித்துக் கொண்டது.

முற்றும்!

# பசியின்மை ஒரு நோயாகும்

சாப்பாட்டுக்கு வழியின்றி வாடுவோர் ஒருபுறம் என்றால், விதவிதமான சாப்பாடு இருந்தாலும் பசியின்றித் தவிப்போர் இன்னொரு புறம். ருசியான உணவுகளைக்கூட சாப்பிட விடாமல் செய்யும் பிரச்சினைதான் பசியின்மை. இதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு.

பசியை அதிகரித்து, உணவுகளை விரும்பிச் சாப்பிட நீங்கள் உணவுப் பழக்கத்தில் கடைபிடிக்க வேண்டிய விடயங்கள் இதோ...

- நல்ல உடல்நலத்துக்கு 40-க்கு மேற்பட்ட ஊட்டச்சத்துக்கள் அவசியம். எனவே உங்கள் உணவு தினமும் ஒரே வகையானதாகவோ, ஒரு வேளையில் ஒரே வகை உணவு மட்டுமோ இருக்கக்கூடாது. தினசரி உணவுடன் கூடுதலாக பழங்கள், காய்கறிகள், பால் பொருட்கள், இறைச்சி, கோழி, மீன் மற்றும் பிற தானிய உணவுகள் இவற்றில் ஏதாவது ஒன்றிரண்டை கூடுதலாகச் சேர்த்துச் சாப்பிடுங்கள்.
- சமைக்கும் உணவு சுவையாக இருந்தால்தான் நம்மால் விரும்பிச் சாப்பிட முடியும். எனவே வழக்கமான காய்கறிகள் என்றாலும் கொஞ்சம் வித்தியாசமான தயாரிப்பு முறையில் சமைத்துச் சாப்பிடுங்கள். சமையல் புத்தகங்கள் அல்லது விதவிதமாக சமைக்கும் அனுபவமுள்ளவரின் உதவியை நாடுங்கள்.
- ஒரு குறிப்பிட்ட பகுதியில் பொதுவாகச் சாப்பிடப்படும் உணவு நமக்கு ஒத்துக்கொள்ளுமா என்று யோசித்தபிறகே சாப்பிட வேண்டும்.
- உங்கள் எடை சரியானதா என்பது பாலினம், உயரம், வயது மற்றும் பாரம்பரியம் உட்பட பல வி'யங்களைச் சார்ந்திருக்கிறது. உடல் எடை அதிகமாக இருந்தாலும், குறைவாக இருந்தாலும் பல வியாதிகள் ஏற்படும். சராசரியான உடல் எடையைப் பராமரிப்பதே உடல் நலத்துக்கும், உணவுப் பழக்கவழக்கத்துக்கும் நல்லது.
- உடல் ஆரோக்கியமாக இருக்க மிதமான அளவில் உணவு சாப்பிடுவதை வழக்கமாகக் கொள்ள வேண்டும். அளவாகச் சாப்பிடுவதுதான் சரியான நேரத்துக்குப் பசியைத் தூண்டும். உங்களுக்குப் பிடித்த உணவை கூடுதலாகச் சாப்பிடுவதும், மற்ற உணவுகளை தேவையைவிட குறைவாக எடுத்துக் கொள்வதும் உடலுக்குத் தீங்கு தரும். இது பசியின்மையையும், உணவின் மீது வெறுப்பையும் ஏற்படுத்தக்கூடும்.
- சிலருக்கு புதுப்புது உணவுகளை சுவைத்துப் பார்ப்பது பிடிக்கும். அடிக்கடி புதிய உணவுகளைச் சேர்த்தால் ஜீரண நேரம் மாறுபடுவதால் பசியெடுப்பதில் பிரச்சினைகள் வரலாம். வழக்கமான உணவுகளை சுழற்சி முறையில் சாப்பிடுவது எளிதான செரிமானத்துக்கு வழிவகுக்கும். வழக்கமான நேரத்திற்கு பசியையும் தூண்டும்.
- சேர்க்க வேண்டிய உணவுகளைச் சேர்ப்பதும், தவிர்க்க வேண்டிய உணவுகளைத் தவிர்ப்பதும் சிறப்பான உணவுப் பழக்கமாகும். உடல் நலத்தில் அக்கறை காட்டும் பலரும் அதிக ஊட்டச்சத்துள்ள உணவை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். ஒவ்வொருவர் உடலுக்கும் தேவையான சத்துக்கள் மாறுபடும். எனவே உணவு ஆலோசகரின் பரிந்துரைப்படி சத்தான உணவுகளைச் சேர்க்கவும், அவசியமற்ற நொறுக்குத் தீனி போன்ற உணவுகளைக் குறைக்கவும், தவிர்க்கவும் செய்யுங்கள்.
- எல்லா உணவுகளும் அவசியமானதும், சத்தானதும் அல்ல. ஒருமுறை கொழுப்பு, உப்பு மற்றும் சர்க்கரை நிறைந்த உணவுகளை நீங்கள் உட்கொண்டால் மறுமுறை அந்த சத்துக்கள் குறைவாக உள்ள உணவை உண்ண வேண்டும். அதேபோல ஒரு சத்தான உணவை தவிர்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டால் அடுத்த முறை அந்த உணவை அவசியம் சேர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் சாப்பிடும் உணவுகள் நீண்ட காலத்துக்கு உங்கள் ஆரோக்கியத்துக்கு பக்கபலமாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## நகைக்குறட் பத்து

தோண்டில் எலும் பொடு தோண்டுக அஃதிலார்
தோண்டலில் தோண்டாமை நன்று. (236 தோன்றில்)

முருங்கை தனித்தொழியக் காய் பறந்தற்றே
உடம்போடுயிரிடை நட்பு. (338 குடம்பை)

பற்றுக கை பற்றும் சிகரெற்றை அப்பற்றைப்
பற்றுக புகையை விடற்கு. (350 பற்றுக)

நிற்க எடுத்தவை நீண்டநாள் சென்றபின்
விற்க அதற்கத் தக. (391 கற்ககசடற)

செல்வத்துள் செல்வம் மது ச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை (411 செல்வத்துட்)

உண்ணற்க வடி யை உணில் உண்க கடனை
எண்ணித் துயர்ப்படாதார். (922 உண்...கள்..)

நாய்நாடி நாயின் செயல்நாடி தெரு நடுவின்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (948 நோய்நாடி)

ரை கட்டி வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
கை கட்டிப்பின் செல்பவர். (1033 உழுதுண்டு)

இருநோக்கு இருகண்ணில் உள்ள தொருநோக்கு
வெளிநோக்கு ஒன்றுள்ளுணர்வு. (1091 இருநோக்கு)


மண்ணொடு மண்ணொடல் நோக்கொக்கி வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. (1100 கண்ணோடு)

**உங்களது கவிதைகளும்**
**இடம் பெற வேண்டுமா?**
கவிதைகளை, விரும்பினால்
உங்களது படங்களுடன்
அனுப்பி வையுங்கள்..
**கவிமுரசு. இல 159 ஏ.**
**கடல்முக வீதி.**
**திருகோணமலை.**

## சிறுபிள்ளை நினைவுகள்

தாத்தாவும் ஆகிப் பல
தலைமுறையும் கண்டு விட்டார்
பேத்திக்கும் சோறு
பிரியமாய் ஊட்டுகின்றார்....
சின்ன வயது மனம்
திரும்பவும் வந்ததனால்
என்னமாய் ஐஸ்பழம்
இனிதே சுவைக்கின்றார்........
(உண்மைச் சம்பவம்

அக்கரை மாணிக்கம்





# பழமையும் புதுமையும்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

**க.கைலாசபதி**

முதலாளித் துவ தத்துவவாதிகளும், அறிஞர்களும் பழம் பெருமையைக் கூண்டிலடைத்து வைத்துக் காட்டுபவர்கள் என்று ஓரிடத்தில் ஸ்டாலின் கூறியுள்ளார். கூண்டிலடைத்துள்ளனர் என்பதற்காக நாமும் அதனைப் புறக்கணிக்க முடியுமா? அவர்களின் பின்னோக்குச் சிறையிலிருக்கும் பழைய செல்வங்களை எமதாக்கி முன்னோக்கிச் செல்பவருக்குத் துணையாக்குதல் வேண்டும்.

### இலக்கியங்களும் வர்க்க வேர்களும்

பழைய சமுதாயங்களில் இலக்கிய கர்த்தாக்கள் கண்ட கனவுகள் பெருமள்விற் கனவுகளாகவே இருந்தன. முதலாளித்துவ சகாப்தத்திலே வர்க்கபேதம் நிறையப் பெற்ற தொழிலாளரும், விவசாயிகளும், முற்போக்கணியைச் சாரும் சிந்தனையாளரும் பிறரும் கனவை நனவாக்கும் அமைப்பு முறைகளையும், தத்துவப் படைக்கலத்தையும் மக்கள் சக்தியையும் கைவரப் பெற்றுள்ளமையால் புதியதொரு சமுதாயத்தை அமைப்பது சாத்தியமாயுள்ளது.

காற்றிலேறி விண்ணையுஞ் சாடுவோம் சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம் என்றெல்லாம் பாரதி போன்ற கவிஞர் கண்ட கனவுகள் விஞ்ஞான வளர்ச்சியால் நாளடையிலே நடைமுறை சாத்தியமாகி வருவதைப் போல பசியும் பிணியும் இன்றி வசியும் வளனும் நிறைந்த சமுதாயக் கனவுகள் மாக்கிச லெனினிச தத்துவ நெறியால் உண்மையாக்கப்பட்டு வருகின்றன. ஆமாம் பழைய கனவுகள் புதிய பொருள் பெறுகின்றன.

பழைய இலக்கியங்களையும், புதிய படைப்புக்களையும் மாறுகொள வைத்து ஒப்புநோக்காமல் இரண்டனுக்கும் ஊடாக இழையோடி வரும் ஒற்றுமைச் சுருதியைத் தெளிவாக்குதல் அவசியம். அப்பொழுது பழமை விரும்பியின் கண் புதுமையைப் பார்க்கக் கூடாது. இது நடைபெறுவதற்கு இரண்டு வழியுண்டு. ஒன்று பழைய இலக்கியங்களின் வர்க்க வேர்களைக் கண்டறிந்து அவற்றின் அரசியற் சமூக அமைப்பு முறைகளைத் தெளிவாக்கி அவற்றிற்குப் பாதகமாகவோ பல்வேறு படைப்புக்கள் தோன்றியுள்ளமையைத் தகுந்த முறையிற் காட்டுதல் வேண்டும். இரண்டு பழைய இலக்கியங்களின் குறை நிறைகளைத் தராசில் நிறுத்திக் குறைபாடுகளை எவ்வாறு எமது கால மாற்றங்களினால் நிறைவாக்க முடியும் என்பதை நிலைநாட்ட வேண்டும். இதன் விளைவாகப் பண்டைய புலவர் பலரும் இன்றைய எழுத்தாளனுக்குமுள்ள வாய்ப்பு வசதி வேறுபாடுகள் புலனாகும். உதாரணமாக, இடைக்காலத்திலே வாழ்ந்த காளமேகப் புலவர், படிக்காசுப் புலவர், இரட்டையர் முதலியோர் தத்தங்காலத்து சமூக நிறுவனங்களைக் கிண்டல் செய்தும், உயர் சாதிக்காரர், தலைமைக்காரர், ஆட்சியாளர் முதலியோரை நையாண்டி செய்தும் பல பாடல் எழுதியுள்ளனர். அன்ன சத்திரத்தை நடத்துபவர் செய்யும் தகிடு தத்தத்தையும், ஏழை விவசாயிகளைப் பண்ணைக்காரர்கள் நடத்தும் அதிகார முறையையும், விபச்சார ஆணையும், பெண்ணையும் மிருக நிலைக்கு இழிவு படுத்தும் அவலத்தையும் வரட்டு கௌரவம், போலிப்பக்தி முதலியவற்றின் பரிதாபகரமான நிலைமையும் வரண்டு வாடிய மலட்டுப் பாண்டித்தியத்தினதும் செப்பிடுவித்தைப் புலமையினதும் சிதையறியாத் தயக்கத்தையும், பிறவற்றையும் இப்புலவரின் படைப்புக்களிலே உய்த்துணரலாம். இன்றைய எழுத்தாளன் மேற்கூறிய புலவரின் வழித்தோன்றலே. அவர்களைவிட இன்றைய எழுத்தாளனுக்கு வாய்ப்பும் வசதியும் நிரம்பியுள்ளன. அவர்கள் தனிப்பட்ட முறையில் வெந்து வெம்பிய உள்ளக் குமுறல்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் குறிப்புரையாகவும் இலக்கியங்களிற் படைத்தனர். இவற்றையெல்லாம் அறியும் இன்றைய எழுத்தாளனுக்குக் கூட்டு முயற்சியின் அனுபவம் உண்டு. மார்க்சிசம், லெனினிசம் காட்டும் சித்தாந்த ஒளியுண்டு. உலகப் புரட்சியின் படிப்பினைகள் உள்ளன. நவ யுகத்தின் அத்தனை வாய்ப்புகளுமுள. எனவே தனிமையில் கூனிக் குறுகாமல் நிமிர்ந்து நடக்க நெஞ்த் தைரியமுண்டு. ஆனால் அன்றைய எழுத்தாளன் விட்ட குறையைத் தொட்டாலன்றி தொடங்கு நிலை தெளிவாகாது. புதுமையிலக்கியம் படைப்பவர்கள் சங்கிலிப் பின்னல் போல வளர்ந்துள்ள மனிதாபிமானப் பண்பின் உரிமைக்காரர் என்பதை உணர வேண்டும். மரபு மரபாக இலக்கியம் படைத்த பெருமக்களின் பணியானது விளலுக்கு இறைத்த நீரல்ல. அது மக்களின் உரிமையாகிவிட்டது. அது எமது முன்னோர் அளித்த அருஞ்செல்வம். அதனைப் பழம்பெருமை என்னும் இன மொழி மதச் சிறையில் பூட்டித் தனியுரிமை கொண்டாட எவருக்கும் உரிமையில்லை. பொதுச்சொத்து உண்மையில் பொதுவுடமையாக வேண்டும்.

### அரசியலும் இலக்கியமும்

வரலாற்று அடிப்படையிலே நோக்கும் போது காலப்பகுதிகளில் எல்லாம் அரசியல், இலக்கியத்தைப் பந்தித்துப் பாதித்துள்ளமை புலனாகுமம். மனிதன் ஓர் அரசியல் ஜீவன் என்று பண்டைய கிரேக்க தத்துவஞானியான அரிஸ்ரோட்டில் கூறினான். அரசியல் மக்களின் வாழ்க்கையைத் தழுவியுள்ளது. அதே நேரத்தில் மக்கள் அரசியலை உருவாக்கி வழி நடத்துகின்றனர். இவ்விரண்டு சக்திகளும் ஒன்றுக்கொன்று இன்றியமையாத உறவுடையன. ஒருவர் அரசியலில் இருந்து விட்டு விடுதலையாகுவேன் என்பது புவியீர்ப்பு சக்தியிலிருந்து விடுபடுவது போன்றதே. இலக்கிய கர்த்தாவிற்கும், அரசியலுக்கும் தொடர்புண்டா இல்லையா என்பது தேவையற்ற வீண் விவாதம் எத்தகைய அரசியலில் எந்தளவு ஈடுபாடு கொண்டுள்ளார் என்பதே பயன் விளைக்கும் கேள்வியாகும். பரணரிலிருந்து பாரதிதாசன் வரை முரஞ்சியூர் முடிநாகராயரிலிருந்து முருகையன் வரை எல்லோரும் வகையிலும், அளவிலும் வேறுபாடுகளுடன் அரசியல் வட்டத்தில் இயங்குபவரே. இதனை நிலைநாட்ட வேண்டியதில்லை. தானே புலப்படும் உண்மையாகும். இதனால் மேற்கூறிய புலவரெல்லாம் கேவலம் அரசியல்வாதிகள் என்று யாரும் கூறுவாரோ? கூறமாட்டார்! கூறமாட்டாராகவே, அரசியலும் இலக்கியமும் முரணானவை என்னும் பிரமை வாதம் அடிபட்டுப் போகும். கார்ல் மார்க்ஸ் எழுதிய கம்யூனிஸ்டு அறிக்கை ஓர் அரசியல் சாதனம் வர்க்க பேதமுள்ள சமுதாய அமைப்பை மாற்றி வர்க்க பேதமற்ற எதிர்கால் அறிவுலகை அமைக்கக் கோரும் அறைகூவல்.


இது யாமறிந்த செய்தி கம்பன் காட்டும் அயோத்தி வருணனை முடியாட்சியில் நிலப் பிரபுத்துவ சமூக அமைப்பின் வரம்பிற்குள் பிணி, வறுமை, கல்விக்குறை மனத்துயர், ஏற்றத்தாழ்வு முதலியன இல்லாதிருக்க அவாவிய வெளிப்பாடு கம்பன் கண்டது கனவு. கம்யூனிஸ்டு அறிக்கை அதனை நனவாக்க முடியும் என்று காட்டியது. கம்பன் அரசியல்வாதியா? கும்பனின் அயோத்தி வருணனைக்காக, அவனைக் கொள்ளவும் வேண்டாம், தள்ளவும் வேண்டாம். ஆனால் தனது காலத்திலிருந்த அரசியலிலிருந்து அவனால் விலக முடியவில்லை என்னும் அடிப்படை உண்மையை உணர்ந்தாற் போதும். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதெல்லாம் வேறொன்றுமறியேன் என்று மனங்குழைந்த ஞானியும் 'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்று கர்மவீரம் பேசிய நாவுக்கரசரும் தத்தங்காலத்து இலக்கிய வடிவிற் கனவு கண்டவரே. அவரெல்லாம் அரசியலிலிருந்து தூரப் போனவரல்லர்.-

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபு - மோதல்

பட தலைப்பு தொடர்பாக எழுந்துள்ள பிரச்சனையில் ஹாலிவுட் நிறுவனத்துடன் மோதலுக்கு தயாராகிவிட்டார் பிரபுதேவா. இந்தியில் முன்னணி இயக்குனராக உள்ளார் பிரபுதேவா. அவர் இயக்கி வரும் படம் ஆக்ஷன் ஜாக்சன். இதில் அஜய் தேவ்கன், சோனாக்ஷி சின்ஹா நடிக்கின்றனர்.
இந்த படத்தின் தலைப்பில் ஹாலிவுட்டிலும் ஒரு படம் தயாராகிறது. வார்னர் பிரதர்ஸ் நிறுவனம் இதை தயாரித்து வருகிறது. இது குறித்து இந்தியாவில் உள்ள வார்னர் பிரதர்ஸ் பட நிறுவனத்தார் பாபா பிலிம்சுக்கு நோட்டீஸ் அனுப்பினர்.
பாபா பிலிம்ஸ்தான் பிரபுதேவாவின் படத்தை தயாரிக்கிறது. இது தொடர்பாக இந்தி சினிமா தயாரிப்பாளர் சங்கத்திலும் வார்னர் பிரதர்ஸ் புகார் அளித்துள்ளனர். ஹாலிவுட் படத்துக்கும் தனது படத்துக்கும் சம்பந்தமில்லை என்றும் எந்த நிலையிலும் தலைப்பை மாற்ற முடியாது என்றும் பிரபுதேவா திட்டவட்டமாக கூறியுள்ளாராம்.



இது குறித்து பாபா பிலிம்ஸ் உரிமையாளர் தன்வானி கூறும்போது, இது இந்திய படம். ஒரே தலைப்பை வைப்பதால் என்ன ஆகிவிடப்போகிறது. நாங்கள் தலைப்பை விட்டுத் தரமாட்டோம். திடீரென வார்னர் பிரதர்ஸ் எங்கள் படத்தின் ஸ்கிரிப்ட்டை கேட்கிறார்கள். அது எப்படி தந்துவிட முடியும் என்றார்.

## கொமெடி ஹீரோயின் பிந்து

தற்போது ஒரு கன்னியும் மூணு களவாணிகளும் உள்பட இரண்டொரு படங்களில் மட்டுமே நடித்துக்கொண்டிருக்கிறார். ஆனால் இந்த படத்திலும் அவர் மட்டுமே நாயகி இல்லை. சித்தார்த்துடன் அர்ஷிதா ஷெட்டியும் இன்னொரு நாயகியாக நடிக்கிறார். இதன்காரணமாக, தமிழில் வளரத் துடிக்கும் அர்ஷிதா, பிந்து மாதவியை முந்திச்சென்று விட வேண்டும் என்று நடிப்பில் கடும் போட்டிக்கோதாவில் இறங்கியதாக கூறுகிறார்கள்.
மேலும், இந்த படத்தில் நான்தான் முக்கிய கதாநாயகி. ஆர்ஷிதா செகண்ட் ஹீரோயினி தான். அதனால் அருள்நிதிக்கு ஜோடியாக நானே நடித்திருக்கிறேன். மேலும், இது முழுநீள காமெடி ஸ்கிரிப்ட் என்பதால் இந்த படத்திலிருந்து காமெடி நாயகியாகவும் உருவெடுத்திருக்கிறேன். இதில் எனது நடிப்பைப்பார்த்து இனிமேல் காமெடி கலந்த கதாபாத்திரங்கள் என்றால் கட்டாயம் டைரக்டர்கள் என்னைத்தான் அழைப்பார்கள். ஆக, என்னை கவர்ச்சி நாயகியாக மாற்ற சில டைரக்டர்கள் தொடர்ந்து கங்கனம் கட்டிக்கொண்டு திரியும் நிலையில், காமெடி என்ற நல்லதொரு பாதுகாப்பு கவசத்தை என் மீது அணிவித்து விட்டிருக்கிறார் இயக்குநர் என்கிறார் பிந்துமாதவி.

# சினிமுரசு

## சினிமா குறுஞ்செய்திகள்



- *அஜித்திலிருந்து அனுஷ்கா நீக்கம்*
  அஜித் - கௌதம் மேனனுக்கிடையிலான கருத்து வேறுபாடு சுமூகமாகி இப்பொழுது தான் அஜித் கௌதமின் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார். இதில் அஜித் இளமையாக தோற்றவிருப்பதாகவும், ஆகையால் அனுஷ்காவின் ஜோடி சரியாகாது என்பதால் மும்பையிலிருந்து புதுமுக ஹீரோயினை தேடி வருகிறாராம் கௌதம்.


- *அஞ்சலி ஷகிலாவாக மறுக்கின்றார்*
  ஷகிலாவின் வாழ்க்கை படமாக எடுக்கப்படவுள்ளது. இதில் நடிக்க அஞ்சலிக்கு பெரிதாக விருப்பம் இல்லை. இருந்த போதிலும் தனக்கு பட வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதினாலும், முக்கியமாக 'தி டர்ட்டி பிக்சர்' நல்ல வசூலைப் பெற்றதோடு தேசிய விருதையும் தட்டிப் பறித்ததால், தனக்கும் தேசிய விருது கிடைக்கலாம் என்கின்ற ஓர் நப்பாசையில் ஓ.கே சொல்லிவிட்டாராம்.

- *நந்திதா-வித்தியாசமான நடிகை*
  எனக்கு காதலும் பிடிக்கும், காமெடியும் பிடிக்கும். நான் விரும்புவது எல்லாம் ஒவ்வொரு படத்துக்கும் என் கரெக்டர் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்பது தான்.

- *கௌதமை துரத்தும் சமந்தா*
  அஜித்துடன் ஜோடி போட சந்தர்ப்பம் கேட்டு கௌதமை துரத்துகிறாராம் - சமந்தா

- *சிம்பு-ஹன்சிகாவுக்கு பாலபிஷேகம்*
  நயன் தனக்கு வெறும் நண்பி மட்டும் தான் ஹன்சிகா தான் என் காதலி என சிம்பு கூறியதையடுத்து, சிம்புவின் ரசிகர்கள் அஜித், விஜய் படங்களை விட வாலு படத்திற்கு அமர்க்களப்படுத்த எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

## சம்பளம் கேட்டதால் சண்டை



டிராகுலா 3டி என்ற மலையாள படத்தை இயக்குனர் வினயன் இயக்கினார். இப்படத்தில் சுதீர் முக்கிய வேடத்தில் நடித்திருந்தார். இதில் நடித்ததற்கு தனக்கு வைத்திருக்கும் சம்பள பாக்கியை உடனே தர வேண்டும் என்று இயக்குனர் வினயனிடம் கேட்டு வருகிறார்.
இதில் கோபம் அடைந்த வினயன், சுதீரை கடுமையாக விமர்சித்தார். இது பற்றி இயக்குனர் கூறும்போது, சுதீரை என் படத்தில் நடிக்க வைத்தது என்னுடைய தவறு என்பதை உண்மையிலேயே இப்போது உணர்கிறேன். முதல் ஷாட் நடிக்க தொடங்கிய நாளிலிருந்து பணம், பணம் என்று கேட்டு வருகிறார். அவரை முக்கிய வேடத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்து பெரிய ரிஸ்க் எடுத்தேன். அவ்வளவு பெரிய படத்தில் அவரை ஒப்பந்தம் செய்ததற்காக அவர்தான் எனக்கு பணம் தர வேண்டும் என்றார்.

## சிக்கினார் அசின்



அசின், தற்போது மைக்ரோமெக்ஸ் செல்போன் நிறுவன தலைவர் ராகுல் ஷர்மாவை காதலிக்கிறார் என்று கூறப்படுகிறது. மும்பையில் செட்டிலாகி இந்தி திரைப்படங்களில் மட்டும் கவனம் செலுத்தி வருகிறார் தற்போது ஆல் இஸ் வெல் என்ற திரைப்படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.
அசினுக்கு வெளிநாட்டில் காதலன் இருப்பதாகவும், அதனால் தான் அவர் அடிக்கடி வெளிநாடு சென்று வருவதாகவும் வடநாட்டு பத்திரிக்கைகளில் செய்திகள் வெளியாகின.
அசினும், மைக்ரோமெக்ஸ் செல்போன் நிறுவனத்தின் எக்சிகியூட்டிவ் டைரக்டர் ராகுல் ஷர்மாவும் காதலிப்பதாக கூறப்படுகிறது. 10 மாதங்களுக்கு முன்பு அசினும், ராகுலும் சந்தித்துக் கொண்டார்களாம். அதில் இருந்து அவர்களுக்கு இடையேயான நெருக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறதாம்.

## வெட்கத்தில் த்ரிஷா

காதலன் யார் என்பதை சரியான நேரத்தில் சொல்வேன் என த்ரிஷா கூறியுள்ளார். திரையுலகிற்கு வந்து 10 வருடங்கள் ஆனாலும் இன்று வரை ரசிகர்கள் மத்தியில் அழகு பதுமையாக வலம் வருகிறார். ஆனாலும் காதல் கிசுகிசுக்களுக்கு பஞ்சமில்லை. நான் நடிகர் ராணாவை காதலிப்பதாக கிசுகிசுக்கள் வெளிவருகின்றன. இது பற்றி எதுவும் சொல்வதற்கில்லை. எந்தவொரு உறவும் சரியான நேரத்தில் அமையும். அதே போல தான் காதலும்...



அந்த நாள் எப்போது வரும் என்று தெரியாது, ஆனால் வரும் போது நிச்சயமாக என் காதலன் யார் என்று வெளிப்படையாகக் கூறுவேன்.

## கன்னடத்தில் - உக்ரம்

மீண்டும் கன்னட ரீமேக்கில் பிரசாந்த் நீல் இயக்கத்தில் ஸ்ரீமுரளி, ஹரிப்ரியா நடித்த கன்னடப்படம் 'உக்ரம்' மை ரீமேக்கில் நடிக்கவிருக்கிறார்.
தமிழ், இந்தி என இரு மொழிகளிலும் ரீமேக் செய்யவிருக்கிறார். தனுஷ் உக்ரம் ரீமேக்கில் ஹீரோவாக மாத்திரமே நடிக்கிறார். ஆனல் ஹீரொயின் யார் என்பதை இன்னமும் முடிவு செய்யவில்லை. தனுஷ் இந்த படத்தின் டிரெய்லரை பார்த்த பின்பே அதனை ரீமேக் செய்ய வேண்டும் என்கின்ற முடிவை எடுத்தார் தனுஷ்.



## நயன் டிஷூம் ரவி

நடிகர் ஜெயம் ரவி தனது அண்ணன் ராஜா இயக்கத்தில் நடித்து வருகிறார். இந்த திரைப்படத்தில் அவருடன் ஜோடி சேர்ந்துள்ளார் நடிகை நயன்தாரா. ஜெயம் ரவி இத்திரைப்படத்தில் நயன்தாராவுடன் மரத்தை சுற்றி சுற்றி வந்து காதல் பாட்டு மட்டும் பாடிவிட்டு செல்ல மாட்டாராம். மாறாக அதிரடி ஆக்ஷன் காட்சிகளில் நடிக்கிறாராம்.
இத்திரைப்படத்தில் ஒரு சண்டை காட்சியை படமாக்கியுள்ளனர். அந்த காட்சியில் வெறியோடு மோதியவர்கள் வேறு யாரும் இல்லை ரவியும், நயனும் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதி வேக கார்

உலகில் நம்பமுடியாத அளவில் அதிக வேகத்தை கொண்ட சிற்றூர்ந்து ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது அமரிக்க வோசிங்டனில் பொறியியலாளர்களால் மணித்தியாலத்துக்கு 435 கிலோமீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய வகையில் இந்த சிற்றூந்து வடிவமைக்கப்பட்டுள்ளது

அமரிக்காவின் சிற்றூந்து தயாரிப்பு நிறுவனமான வெனொம் ஜிடி இந்த சிற்றூந்தை புளோரிடாவில்



உள்ள கென்னடி விண்வெளி நிலையத்தில் பரீட்சித்து பார்த்துள்ளது ஏற்கனவே வெனொம் நிறுவனம மணித்தியாலத்துக்கு 431 கிலோமீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய சிற்றூந்தையே வடிவமைத்திருந்தது

## வீடியோக்களை GIF ஆக்க

உலகின் முன்னணி வீடியோ பகிரும் தளமாகக் காணப்படும் யூ டியூப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள வீடியோ கோப்புக்களை GIF கோப்புக்களாக மாற்றுவதற்கு Gifff.fr (http://gifff.fr/) எனும் தளம் உதவி புரிகின்றது.

இத்தளத்திற்கு சென்று நீங்கள் GIF கோப்பாக மாற்றவேண்டிய வீடியோவின் யூடியூப் URL இனை உட்புகுத்தி Enter கீயினை அழுத்த வேண்டும். அதன் பின்னர் தோன்றும் விண்டோவில் தேவையான பகுதிகளை தேர்ந்தெடுக்கும் வசதி காணப்படுகின்றது.

அதேபோல செட்டிங்ஸ் செய்யும் வசதியும் காணப்படுகின்றது.

இவற்றினை தெரிவு செய்ததன் பின்னர் Make it So என்பதனை அழுத்தி செயன்முறை முடிந்த பின்னர் Download Now என்பதனை அழுத்தி தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

# விளையாட்டுப் பையன்

## உலக சாதனை வண்டி



உலகின் மிகவும் விலையுயர்ந்த மோட்டார் சைக்கிள் ஒன்றினை பிரபல மோட்டார் சைக்கிள் தயாரிப்பு நிறுவனமான Lauge Jensen என்ற நிறுவனம் தயார் செய்துள்ளது. அந்த நிறுவனம் தான் தயாரித்த இந்த மோட்டார் சைக்கிளை Hamburg Motorcycle Days expo என்ற கண்காட்சியில் பொதுமக்கள் பார்வைக்காக வைத்து உள்ளது.

இந்த மோட்டார் சைக்கிளின் விலை $800,000. இந்திய மதிப்பில் சுமார் ரூ.5 கோடி. மோட்டார் சைக்கிளின் முக்கிய பாகங்கள் அனைத்தும் தங்க முலாம் பூசப்பட்டுள்ளதுதான் இதன் விலை மதிப்பிற்கு காரணம்.

இந்த வாரத்தின் இறுதிவரை Hamburg Motorcycle Days expo என்ற கண்காட்சியில் பார்வைக்காக இந்த மோட்டார் சைக்கிள் வைக்கப்பட்டிருக்கும் என்றும் , அதன்பின்னர் இந்த மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு அனுமதிக்கப்படும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## அதி நவீன PENDRIVE

முன்னணி இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழும் Toshiba ஆனது Transmemory Pro எனும் அதி நவீன பென்டிரைவ்வினை அறிமுகம் செய்கின்றது. USB 3.0 தொழில்நுட்பத்தினைக் கொண்ட இச்சாதனமானது 128GB சேமிப்பு கொள்ளளவை உடையதாக காணப்படுகின்றது.

மேலும் 222 MB/s வேகத்தில் தரவுகளை வாசிப்பதுடன், 205MB/s வேகத்தில் தரவுகளை சேமித்துக் கொள்ளக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் விலையானது 199.99 டொலர்களாகக் காணப்படுகின்றது. மேலும் இந்நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட 64GB கொள்ளளவுடைய மற்றுமொரு பென்டிரைவ் 129.99 டொலர்களாகும்.

## ஜி மெயிலில் புதிய மாற்றம்

ஒன்லைன் சொப்பிங், செய்தி சேவை போன்றவற்றிற்கு தமது மின்னஞ்சல் முகவரிகளை பயன்படுத்தி சந்தாதாரர் ஆகமுடியும்.

அத்துடன் சில மின்னஞ்சல்களை தவிர்க்க வேண்டியிருந்தால், அது இதுவரை காலமும் கடினமானதாகவே இருந்தது.

ஆனால் தற்போது ஒரே ஒரு கிளிக் மூலம் Subscribe செய்து குறித்த மின்னஞ்சல் முகவரிகளிலிருந்து வரும் மின்னஞ்சல்களை தவிர்க்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# ஒரு கொலையின் கதை

2-1

இது ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.

**முன்கதைச் சுருக்கம்:**

திருகோணமலையில் இரண்டாயிரத்துப் பன்னிரெண்டாம் ஆண்டு, ஏப்ரல் மாதம் பதினெட்டாம் திகதி இரவில் இளம் குடும்பத்தர் ஒருவர் கொல்லப்பட்டார்.

அன்றைய தினத்தில் அவரது கொலை சர்வதேச அரங்கு எங்கும் எதிரொலித்தது. ஏனெனில் அவர் இங்கிலாந்தில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் இலங்கைக்குத் திரும்பி வந்திருந்தார். அதேவேளை அவரது இளம் மனைவி இங்கிலாந்தில் மாணவ அனுமதியுடன் வசித்து வந்தார்.

யுத்தம் உச்சக்கட்டங்களின் அந்தத்தை எட்டிக்கொண்டிருந்த காலத்தில் இக்கொலை நடந்திருந்தது.

எனவே இம் மூன்று காரணிகளும் இக் கொலையைச் சர்வதேச அரங்கெங்கும் பறைகொட்டியது.

அரச படைகளாலேயே அவர் கொல்லப்பட்டதாக தமிழர் சார்பு ஊடகங்கள் தமது குற்றச் சாட்டுக்களை சுமத்தியிருந்தன.

எனினும் அக்குற்றச்சாட்டுக்களை வன்மையாக மறுத்திருந்த அரசாங்கம் தமக்கும் அக் கொலைக்கும் தொடர்புகள் எவையும் இல்லை எனத் தெரிவித்திருந்ததுடன் அரச படைகள் எச்சந்தர்ப்பத்திலும் அக் கொலையுடன் தொடர்பு பட்டிருக்கவில்லை எனவும் அறுதிபடத் தெரிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து இங்கிலாந்து இக் கொலை தொடர்பாக தனது விசேட கவனத்தைச் செலுத்தத் தொடங்கியது.

இவை யாவும் இலங்கை அரசின் மீதும் அரச படைகளின் மீதும் அழுத்தங்களை உருவாக்கியிருந்தன.

முறையாக விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்தினாலன்றி சர்வதேசம், தன் மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபட முடியாது என்பதை இலங்கையின் அரச எந்திரம் சரியாகப் புரிந்து கொண்டது.

அத்துடன் இக் கொலையுடன் தமது தரப்புக்கள் எவையும் உண்மையிலேயே சம்பந்தப்படவில்லை என்பதையும் காவல்துறையும், புலனாய்வுத்துறையும் உறுதியாக அரசிற்குத் தெரிவித்திருந்தன.

இதையடுத்து இக் கொலை தொடர்பாக முழுமூச்சில் விசாரணைகளை முடுக்கியது அரசு.

விறல் மிக்க உதவிக் காவல்துறை அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் மூன்று விசேட புலனாய்வுக் குழுக்கள் களம் இறக்கப்பட்டன.

ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது அக் கொலைக்கான எவ்வித உடனடி, நேரடிக் காரணங்களையும் புலனாய்வுப் பிரிவினரால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

அத்துடன் கொலை நடந்த நேரம், நாள் மற்றும் இடம் ஆகியன தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த விதம் எவ்வித தடயங்களையும் விட்டுச்செல்லாதிருப்பதற்கு உதவி செய்திருந்தது.

அதனைப் புரிந்து கொண்ட புலனாய்வுத் துறையின் மூன்று அணிகளும் தமக்கான தந்திரோபாய புலனாய்வு நகர்வுகளை முன்னெடுத்திருந்தன.

அக் குழுக்களில் முதலாவது குழு மேலெழுந்த வாரியாக சந்தேகப்படுபவர்களை விசாரிப்பது, தகவல்களைத் திரட்டுவது மற்றும் பல்வேறு முனைகளிலும் விசாரணைகளை ஆரம்பிப்பது என போக்குக் காட்டிக் கொண்டிருந்தது. ஏனெனில் திறமையாகத் திட்டமிட்டுச் செயற்பட்ட அக் கொலைஞர்கள் தாம் கண்காணிக்கப்படுகின்றோம் என்பதை அறிந்தால் புதிய மறைவிடங்களை நாட்டுக்குள்ளேயே அல்லது நாட்டுக்கு வெளியேயோ தேடி விடலாம் என்பதனால் அவர்களுக்கு போக்குக் காட்டும் நடவடிக்கையை ஒரு அணி மேற்கொண்டிருக்க ஏனைய இரு அணிகளும் சந்தேக நபர்களைக் கண்டு பிடிப்பதற்கான வினைத்திறன் நடவடிக்கைகளில் இறங்கியிருந்தன.

அந் நடவடிக்கைகளில் புலனாய்வுத் துறைக்குச் சில தடயங்கள் கிடைக்கப்பெற்றன. அத் தடயங்களில் ஒன்று தொலைபேசி மீள் நிரப்பு அட்டை.

அவ்வட்டையில் இருந்து யாருடைய தொலைபேசிக்கு பணம் மீள் நிரப்பப்பட்டது என்பது தெரியவந்த போது புலனாய்வாளர்களே அதிர்ந்து போனார்கள்.

கொலை செய்யப்பட்டவருடன் எவ்வித தொடர்புகளையும் கொண்டிருக்காத பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மேல்மாகாணத்தில் வசிக்கும் பெண்மணி ஒருவரின் தொலைபேசி இலக்கமாக அவ்விலக்கம் காணப்பட்டது.

எனினும் அத் தொலைபேசி இயங்கு நிலையில் இருந்ததால் அதனைப் பாவிப்பவர் யார்?. எனக் கண்டுகொண்ட புலனாய்வுத்துறை அவ்விளைஞனைப் பின்தொடரத் தொடங்கியது.

அத் தொடர்வில் அலிக என்ற அவ்விளைஞனும் அவனுக்கு உதவி புரிந்ததாக டொடி என்ற மற்றொரு இளைஞனும் சந்தேக வட்டத்துக்குள் விழுந்தனர்.

அதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் இந்தியாவிற்குச் செல்ல முயற்சிப்பதான சந்தேகம் எழுந்த போது, அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக வட்டத்துக்குள் விழுந்த காலப்பகுதிக்கும் கைது செய்யப்பட்ட காலப்பகுதிக்கும் இடைப்பட்ட நாட்களில் அவர்கள் இருவரும் இக் கொலையுடன் கொலையுடன் அவர்கள் தொடர்பு பட்டிருக்கலாம் என்பதை உறுதிப்படுத்தக் கூடிய அனைத்து விடயங்களையும் காவல் துறைப் புலனாய்வாளர்கள் சேகரித்துக் கொண்டனர். தமது சந்தேகம் மிகத் தெளிவான பின்னரே அவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர்.

நீதிமன்றில் அடையாள அணிவகுப்பு நடைபெற்று அவர்கள் இருவரையும் மூன்று சாட்சிகள் அடையாளம் காட்டியிருந்தனர். அத்துடன் முதலாவது பாகம் முற்றிற்று. இனி..........

**பாகம் 2**

**தொடரும்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யங் ஒலிம்பிக்ஸ் வெற்றி





கதிரவன்

திருகோணமலை ஸ்பென்ஸ் விளையாட்டுக்கழகம் 25 வருட நிறைவை ஒட்டி அணிக்கு ஆறு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றினை நடத்தினார்கள். ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு தினங்களில் 22, 23 .02.2014 இப்போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் 32 அணிகள் பங்கு கொண்டன.

இறுதிப்போட்டி ஞாயிற்றுக்கிழமை 23.02.2014 மாலை நடைபெற்றது. இப்போட்டியில் யங் ஒலிம்பிக்ஸ் கழகத்தை எதிர்த்து மேர்ட்டிலயன் விளையாட்டுக் கழகம் மோதியது.

முதலில் களம் புகுந்த யங் ஒலிம்பிக்ஸ் கழகத்தினர் 2 விக்கட் இழப்பிற்கு 63 ஓட்டங்களைப் பெற்றனர். லிரோன்ஸ் 21, தேவ'ரூபன் 20, கஜன் ஆட்டமிழப்பின்றி 17 ஓட்டங்களைப் பெற்றனர்

பதிலுக்கு களம் புகுந்த மேர்ட்டி லயன் கழகம் 3.5 பந்து பரிமாற்றங்களில் 22 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் யங் ஒலிம்பிக்ஸ் கழகம் 41 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியனானது.

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் செ.பத்மசீலன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றிக்கிண்ணத்தை வழங்கி வைத்தார்.

## விபுலானந்தாவின் விளையாட்டுப் போட்டி

மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டியின் இறுதி நாள் நிகழ்வானது வித்தியாலயத்தின் அதிபர் திருமதி வீ.வேலாயுதம்பிள்ளை தலைமையில் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த (21) வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோது அதிதிகள் அணிநடை மரியாதையினை ஏற்பதையும், நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் எஸ்.ரங்கநாதன் வெற்றியீட்டிய வீரர்களுக்கு வெற்றிக்கேடையங்களையும் சான்றிதழ்களையும் வழங்கிவைப்பதையும் படங்களில் காணலாம்.



## ஆசியக் கிண்ண துடுப்பாட்டப் போட்டிகள்

பங்களாதேசில் ஆரம்பமாகியுள்ள ஆசியக் கிண்ண் துடுப்பாட்டப் போட்டிகளின் முதல் மூன்று போட்டிகளில் இலங்கையும் இந்தியாவும் ஆரம்பப் போட்டியை வென்று தமது ஆரம்பத்தை வெற்றிக் களிப்புடன் ஆரம்பித்துள்ளன.

பங்களாதேஸ் அயிக்கு எதிரான இந்தியாவின் வெற்றிக்கு இந்திய அணித் தலைவராக பொறுப்பேற்றிருக்கும் விராட் கோஹ்லியின் சதம் துணை செய்ய பாகிஸ்தான் அணிக்கு எதிரான இலங்கையின் வெற்றிக்கு லசித்த மாலிங்க வின் அபாரப் பந்து வீச்சு ஐந்து இலக்குகளை வீழத்தியது உதவி புரிந்தது.

முன்றாவது போட்டியில் களம் இறங்கிய பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளில் பந்து வீச்சைத் தேர்வு செய்த ஆப்கான் அணி பாகிஸ்தானை முதல் 30 பந்துப் பரிமாற்றங்களிலும் பயமுறுத்தியதைக் காண முடிந்தது. எனினும் போட்டியை முடிக்கும் திறனைத் தற்போது வரை பெற்றுக்கொள்ளாத ஆப்கான் அணியால் பல்லாண்டுகால அனுபவம் வாய்ந்த பாகிஸ்தான் அணியின் முன் தாக்குப் பிடிக்க முடியாமற் போனதென்னவோ உண்மைதான்

# ஜெயம் பாலகம்
## குறுக்கெழுத்து புதிர் 007

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | | 4 | ■ | | 5 |
| | ■ | 6 | | ■ | ■ | 7 | | ■ | |
| | ■ | | ■ | 8 | | | ■ | ■ | |
| | ■ | ■ | ■ | | ■ | ■ | 9 | 20 | |
| 10 | | 11 | | | | 12 | ■ | | ■ |
| | ■ | | ■ | | ■ | | ■ | | ■ |
| | ■ | | ■ | 13 | | ■ | 14 | | |
| 15 | | | | | ■ | 16 | ■ | | ■ |
| ■ | | ■ | ■ | ■ | 18 | | | | |
| 17 | | | ■ | 19 | | ■ | ■ | | ■ |

### இடமிருந்து வலமாக

1. குளமும் கோட்டமும் கட்டிய மன்னன்.
5. பிறந்த குழந்தையை இவ்வாறும் கூறுவர். (குழம்பியுள்ளது)
6. மழையினை இம்மழை என்றும் கூறுவர்.
7. 'இளமையில்க் .... ' சான்றோர் வாக்கு.
8. வளைவு இதன் ஒத்த கருத்து பொருள்.
9. பாம்பாட்டி கையில் வைத்திருப்பது (குழம்பியுள்ளது).
10. மீன்குத்தி பறவையை இவ்வாறும் கூறுவர்.
13. நினைத்ததை எல்லாம் தரவல்லது கற்பக . . . .
14. பெண் இதன் ஒத்த கருத்து சொல்.
15. சாட்டையை சுழற்றினால் ஒற்றைக்காலில் நடனமாடுவான். (குழம்பியுள்ளது)
17. யானைக்கு பிடிப்பது.
18. '.... . .... . மனை நோக்காதே' திருவள்ளுவர் வாக்கு.
19. சுவரில் அறையப்படுவது.

### மேலிருந்து கீழாக

1. கடல் கொண்ட தென்னாடு
2. ஒருவருக்கு தரும் உறுதிமொழி.
3. நாட்டின் அரசனை இவ்வாறும் கூறுவர்.
4. இராமாயண படகோட்டி
5. மகாபாரத பாஞ்சால அரசர் துருபதனின் மகள்.
8. பெரியார் அறிவுறுத்திய அறிவு (குழம்பியுள்ளது)
11. முனிவனை இவ்வாறும் அழைப்பர். (குழம்பியுள்ளது)
12. அர்ஜுனன் இதில் சிறந்தவன்.
16. முதுமையில் விழுவது.
18. அதர்மம் இதனைத் தரவல்லது.
20. தென்னாலியில் பிறந்த விகடகவி.

## குறுக்கெழுத்து புதிர் 006 ற்கான விடைகள்

### இடமிருந்து வலமாக

1. அம்பிகாபதி
3. லட்டு
4. தாவணி
5. முரண்
8. மிடி
9. கோவர்த்தனமலை
11. காப்பியம்
14. பிரகடனம்
18. காளமேகம்
19. கனருசி

### மேலிருந்து கீழாக

1. அபிதானகோசம்
2. திரம்
3. தோடு
5. முதல்காப்பியம்
6. மண்டை
7. லட்சுமிபாய்
10. ஆலை
12. பிடர்
13. கடகம்
15. கடகம்
16. மேதை
17. கல்
20. சினம்

**போட்டி முடிவுத் திகதி : 06.03.2014**

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250,. ரூபா 150, ரூபா 100 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.
- இப்போட்டியில் ஜெயம் பாலகம், மலைமுரசு ஊழியர்களும் அவர்களின் நெருங்கிய உறவினர்களும் பங்குபற்ற முடியாது.

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :
ஜெயம் குறுக்கெழுத்துப் போட்டி. இல — 006
32, இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

1. அடி மரத்திலும், வேரிலும் காய்க்கும் மரம் எது?
   1. நெல்லி 2. பலா 3. லொவி 4. ஜம்பு

2. தினமும் காய், பழங்களைப் பெற வீட்டுத்தோட்டத்தில் பயிரிடப்படும் தாவரம் எது?
   1. மா 2. பலா 3. வாழை 4. ரம்புட்டான்

3. வித்தை அகற்றிய பின் உணவாக சமைக்கும் காய்கறி வகை?
   1. கத்தரிக்காய் 2. புடொல் 3. சிறகவரை 4. ஈரப்பலா

4. வித்து முளைத்தலுக்கு அவசியமில்லாத காரணி எது?
   1. நீர் 2. வெப்பம் 3. வளி 4. சூரிய ஒளி

5. சித்திரை மாதத்தில் பூக்கும் மரம் எது?
   1. மா 2. இறப்பர் 3. வேம்பு 4. தாழை

6. விலங்குகள் விரும்பியுண்ணாத தாவரம் எது?
   1. கள்ளி வகை 2. பலா இலை 3. சோளம் 4. பால் அறுகு

7. நீரின் மூலம் பரம்பலடையும் பழம் எது?
   1. தேங்காய் 2. மரமுந்திரிகை 3. புலி நகம் 4. ஒட்டொட்டி

8. கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் வளரும் தாவரம் எது?
   1. கண்ணா 2. தாழை 3. மின்மினி மரம் 4. புண்ணைமரம்

9. பூச்சியுண்ணித் தாவரங்கள் பூச்சிகளை பிடித்து உண்ணுவதற்கு காரணம் எது?
   1. தாவர உணவை உண்பதற்காக
   2. பூச்சி பீடைகளின் சேதத்தை குறைத்தல்
   3. பூச்சியை சமிபாடடையச் செய்து நைதரசனை பெற
   4. பூச்சிகளை பிடித்து உண்பதால் பூச்சிகளைக் கொல்லுதல்.

10. மாலை வேளையில் இலைகள் உறக்கத்தில் காணப்படும் தாவர இலை யாது?
   1. நெருஞ்சி 2. புளி 3. காசித்தும்பை 4. ஈரப்பலா

11. ஒவ்வொரு 10 மீற்றருக்கும் ஒரு தூண் வீதம் நடப்பட்டுள்ளது. ஒரு வரிசையில் 20 தூண்கள் காணப்படின், முதலாவது தூணுக்கும், கடைசித் தூணுக்கும் இடையிலான தூரம் யாது?

12. அனுலாவிடம் ரூபா 52 உம், சனுஜனிடம் ரூபா 42 உம் உள்ளது. இருவரிடமும் உள்ள பணத்தொகை சமமாவதற்கு அனுலா, சனுஜனுக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?

13. 5மீற்றர் நீளமுள்ள ஒரு நாடாவிலிருந்து ஒவ்வொன்றும் 20 செ.மீற்றர் நீளமுள்ள 5 துண்டுகள் வெட்டப்பட்டன. நாடாவின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் யாது?

14. ஒரு பேரூந்தில் 35 பிரயாணிகள் பயணம் செய்கின்றனர். அடுத்த பஸ்தரிப்பு நிலையத்தில் 4 பிரயாணிகள் இறங்க, 11 பிரயாணிகள் பஸ் வண்டியினுள் ஏறினர். பஸ் வண்டியினுள் பயணிக்கும் பிரயாணிகள் எத்தனை பேர்?

15. பின்வரும் சொற்களை வைத்து பெயராகவும், வினையாகவும் வருமாறு வசனம் அமைக்கவும்.

1. பாய் : பெயர் ........................................
   வினை ........................................
2. கரை : பெயர் ........................................
   வினை ........................................
3. உடு : பெயர் ........................................
   வினை ........................................
4. மடி : பெயர் ........................................
   வினை ........................................
5. தட்டு : பெயர் ........................................
   வினை ........................................

16. இலங்கையின் தேசிய விளையாட்டு எது? ........................................

17. இலங்கையில் எத்தனை மாகாணங்கள் உள்ளன? ........................................

18. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவரை எவ்வாறு அழைப்பர்? ........................................

19. ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் ஒன்றாகப் படித்தவரை எவ்வாறு அழைப்பர்? ........................................

20. ...................... உறக்கமின்றிப் பாடுபட்டு உழைத்த காரணத்தால் அவன் பணக்காரனாக இருக்கின்றான்.

# பரீட்சை நேரத்தில் கவனிக்க வேண்டியவை

பரீட்சை காய்ச்சல் வந்தாலே போதும் மாணவ, மாணவிகள் தூக்கத்தை மறந்து, சாப்பாட்டை வெறுத்து இரவு பகலாக தேர்வுக்கு தயாராகி கொண்டிருப்பார்கள். என்னதான் கஷ்டப்பட்டு படித்தாலும் தேர்வு நேரத்தில் இதயம் திக் திக் என்று அடிக்கும். தூக்கம் வராது. விடிய விடிய கண் விழித்து படிப்பவர்களும் உண்டு. ஒழுங்காக சாப்பிடுவதும் கிடையாது.

ஆனால் இதுவே பரீட்சையை நன்றாக எழுத முடியாதபடி கவிழ்த்து விடும்.

தேர்வு நாளில் எக்காரணத்தை கொண்டும் காலையில் சாப்பிடாமல் போகக் கூடாது. பெரும்பாலும் காலை 8 மணிக்கே வீட்டில் இருந்து புறப்படுவார்கள். அந்த நேரத்தில் 2 இட்லி, அல்லது தோசை உள்பட ஏதாவது லைட்டாக சாப்பிடுவது அவசியம். தேர்வு 10 மணிக்குதான் தொடங்கும். அதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பாக ஏதாவது ஒரு பழம் சாப்பிட வேண்டும். ஏனென்றால் மதியம் 1 மணி வரை காலையில் சாப்பிட்ட உணவு பசி தாங்காது.

மதியம் வீட்டுக்கு வந்ததும் மதிய உணவை சாப்பிட்டு விட்டு குறைந்தது அரைமணி நேரம் பிடித்தமான ஏதாவது பொழுது போக்கில் ஈடுபட வேண்டும். இது மன அழுத்தத்தை குறைக்கும். இரவில் 2 மணி வரை கண் விழித்து படித்து விட்டு காலையில் தாமதமாக எழும்புவார்கள் அது தவறு. குறைந்தது 7 மணி நேரம் நன்றாக தூங்க வேண்டும். அது ஞாபக சக்தியை அதிகரிக்கும்.

பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே வந்ததும் ஐஸ்கிரீம் அல்லது நொறுக்கு தீனி சாப்பிடுவார்கள். இவை அவர்களுக்கு நிம்மதியைத் தரும் ஆனால் அதிகம் அவற்றைச் சாப்பிட்டால் அடுத்தநாள் பரீட்சைக்கு உடலைக் கெடுக்காமல் இருக்க வேண்டும்.

# சிறுவர் முரசு



## பச்சோந்திக் கல்

குட்டிக்கதை

நகரில் கப்பி ரோடு ஒன்று இருந்தது. அதன் மேல் வேகமாகப் போன வண்டியின் சக்கரம் ஒன்று ஒரு கப்பிக் கல்லை பெயர்த்து உருட்டி விட்டுப் போய் விட்டது. அந்தக் கப்பிக் கல் தனக்குள் சொல்லிக் கொண்டது. "என்னைப் போன்ற மற்றவர்களுடன் பிணைக்கப் பட்டு நான் இப்படி ஒரே இடத்தில் கிடப்பானேன்? நான் தனியாகவே வாழ்ந்து பார்க்கிறேன்!"

தெருவோடு போன ஒரு பையன் அந்தக் கல்லைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். கல் தனக்குள் எண்ணிக் கொண்டது. "நான் பிரயாணம் செய்ய விரும்பினேன். பிரயாணம் செய்கிறேன். தீவிரமாக எதையும் விரும்பினாலே போதும். விரும்பிய படி நடக்கும்!"

கல்லை ஒரு வீட்டை நோக்கி எறிந்தான் பையன். "ஹா! நான் பறக்க விரும்பினேன் பறக்கிறேன். என் விருப்பம் போலத்தான் நடக்கிறது எல்லாம்"

ஒரு ஜன்னல் கண்ணாடியில் "டண்" என்று கல் மோதி உடைத்துக் கொண்டு உள்ளே போனது, கண்ணாடி உடையும் போது அது சொல்லியது "போக்கிரி, நான் போகும் வழியில் விலகிக் கொள்ளாமல் நிற்கிறாயே?! என்னை மறிப்பவர்களை எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. என் சௌகரியத்திற்காகத்தான் எல்லாம் இருக்கிறது. ஆகவே இனிமேல் கவனமாக இரு!"

வீட்டின் அறைக்குள் இருந்த ஒரு மெத்தையின் மேல் விழுந்தது கல். "இவ்வளவு நேரம் பிரயாணம் செய்ததில் அலுப்பாகி விட்டது. சற்று ஓய்வு தேவை என்று நினைத்த பட்சத்திலேயே படுக்கை கிடைத்து விட்டதே. ஆஹா!" என்று நினைத்துக் கொண்டது.

ஒரு வேலைக்காரன் அங்கே வந்தான். படுக்கையில் இருந்த கல்லைத் தூக்கி ஜன்னல் வழியே திரும்பவும் தெருவில் எறிந்து விட்டான்.



அப்போது கப்பிக் கல் தன்னுடன் பதிந்திருந்த ஏனைய கப்பிக் கற்களிடம் "சகோதரர்களே! சௌக்கியமா? நான் இப்போது பெரிய மனிதர்களைப் பார்க்க அவர் மாளிகைக்குப் போய் விட்டுத் திரும்புகிறேன். பெரிய மனிதர்களையும் பணக் காரர்களையும் எனக்குப் பிடிப்பதில்லை. என்னைப் போன்ற சாதாரண மக்களிடம்தான் எனக்கு உண்மையில் ரொம்பப் பிரியமும் மரியாதையும் இருக்கிறது. அதனால்தான் திரும்பி விட்டேன்" என்றது.

சொல்லிக் கொண்டிருக்கும் போதே சரக்கு ஏற்றி வந்த ஒரு வண்டியின் சக்கரம் தனியாகக் கிடந்த கல்லின் மேல் ஏறியது. "அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா!" என்று சொல்லிக் கொண்டே துண்டு துண்டாகச் சிதறிப் போனது அந்தப் பச்சோந்தி கப்பிக் கல்.

முற்றும்-

சிறுவர் முரசு பகுதியில் உங்கள் குழந்தையின் ஆக்கங்களும் இடம்பெற வேண்டுமா? புகைப்படத்துடன் (விரும்பினால்) ஆக்கங்களை அனுப்புங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி 07 பாடம் -

1. சுருக்குக. 18.24 + 4.214
2. தீர்க்க 2x - 1 = 9

3. 10 புத்தகங்களின் விலை m ரூபா எனின், ஒரு புத்தகத்தின் விலையைக் காண்க.

4. சுருக்குக. (-3) + (-10) – (-5)
5. சுருக்குக. 5x/10 – 2x/20

6. X < -2 சமனிலியை எண்கோட்டில் குறித்துக் காட்டுக.

7. 1.03l ஐ ml இல் தருக.

8. $\sum = \{1, 2, 3, 4, 5\}, A = \{3, 5\}$ எனின், ஐக் காண்க.

9. $Log_2 1024$ இன் பெறுமானம் காண்க.

10. 5 ஐ முழுமைச் சேடாகத் தருக.
11. செவ்வகத்தின் நீளம் 8 cm. அதன் மூலைவிட்டம் 10cm எனின், அகலத்தைக் காண்க.

12. தீர்க்க. $5^{2x-1} = 125$
13. (5, 0) (0, -1) என்னும் புள்ளிகளினூடாக செல்லும் நேர்கோட்டின்
    அ. படித்திறன் யாது?
    ஆ. சமன்பாடு யாது?

14. காரணிப்படுத்துக. $2x^2 - 8$

15. இரண்டு எண்களின் கூட்டல் இடை 15. அவற்றுள் ஒரு எண் 12 எனின், மற்றைய எண்ணைக் காண்க.

16. Sin60cos30 + sin30cos60 இன் பெறுமானம் காண்க.

17. மதில் ஒன்றைக் கட்டுவதற்கு 6 மனிதர்களுக்கு 4 நாட்கள் தேவை எனின், அம்மதிலைக் கட்டுவதற்கு 3 மனிதர்களுக்கு எத்தனை நாட்கள் தேவை?

18. எண்தொடரி ஒன்றின் n ஆம் உறுப்பு 5n - 2 ஆகும்.
    அ. அத் தொடரின் 63 எத்தனையாம் உறுப்பு?
    ஆ. இதன் 14ம் உறுப்பின் பெறுமானம் யாது?
    இ. (n – 3) ஆம் உறுப்பு யாது?

19. 7.8503 இவ் எண்ணை
    அ. கிட்டிய முழு எண்ணிற்கு ஆ. கிட்டிய முதலாம் தசமதானத்திற்கு
    இ. கிட்டிய இரண்டாம் தசமதானத்திற்கு மட்டந்தட்டுக.

20. 5ஆவது சதுர எண்ணிற்கும் 7 ஆவது சதுர எண்ணிற்கும் இடையில் உள்ள வித்தியாசம் யாது?

21. செய்தித்தாள் ஒன்றிலே விளம்பரம் ஒன்றை வெளியிடுவதற்கு முதல் 15 சொற்களுக்கு ரூபா 22.50 உம் அதற்கு கூடுதலான ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2.50 உம் அறவிடப்படுகின்றன. 20 சொற்களைக் கொண்ட விளம்பரம் ஒன்றை வெளியிடக் கொடுக்க வேண்டிய தொகையை காண்க.

## சென்ற வார விடைகள்

| | |
|---|---|
| 1. 100 செ.மீ | 2. 315 |
| 3. x (1-x) (1+x) | 4. 1-x |
| 5. $(x + 2)^2 (x + 3) (x – 3)$ | 6. C = -1 |
| 7. y/x | 8. 195 |
| 9. $a^4 b^2/9$ | |
| 10. 98 பாகை | 11. -1/5 |
| 12. -x -y -7z | 13. $X^2 + 8x + 16$ |
| 14. x = 6, x = -14 | |
| 15. 60cm | 16. 50.4664 |
| 17. அ. ரூ 360 ஆ. 30வீதம் இ. ரூ 2160 | |
| 18. 8.07 x | |
| 19. அ. சாய்வுமானி இ. வெளிச்சவீட்டிலிருந்து வள்ளத்துக்கான தூரம் 250மீ | |

**கணிதம் வழிகாட்டல் -**
**திருமலையின் பிரபல ஆசிரியர் T.குமணன்**

MATHS
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும் பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெறலாம்.

## க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சைக்கான பயிற்சிகள் ~ 02

பாடம் ~ வரலாறு

1. இலங்கையின் பெயரளவு ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்ட ஆண்டு
   1. 1947 2. 1972 3. 1998 4. 1978

2. இரண்டாம் உலக மகாயுத்தத்துக்கு உடனடிக்காரணமான ஜேர்மனியின் படையெடுப்பு இடம்பெற்ற நாடு
   1. ரஸ்யா 2. அமெரிக்கா 3. பிரித்தானியா 4. போலந்து

3. இலங்கையில் லம்பகர்ண வம்சத்தை தோற்றுவித்தவர்
   1. வசபன் 2. மகாசேனன் 3. தாதுசேனன் 4. 1ம் விஜயபாகு

4. இந்தியாவில் முஸ்லீம்களுக்கு தனிநாடு வேண்டும் என முதன்முதலில் பாடியகவிஞன்
   1. அல்லாமா இக்பால் 2. M.C.சித்திலெப்பை
   3. தாதாபாஸ் நபுரோஜி 4. அலிஜின்னா

5. சீனாமுதலாளித்துவபாதையில் செல்வதைதடுக்கமாவேசேதுங முன்னெடுத்தசெயல்திட்டம்
   1. முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் 2. நீண்டநடைப் பயணம்
   3. கலாசாரப்புரட்சி 4. கோமின்டாங் படைஅமைப்பு

6. டொகுகாவாசோகுன்களின் ஆட்சி முடிவுக்கு காரணமாக அமைந்த பிரதா விடயம்
   1. கோகுன்களின் ஆடம்பரவாழ்வு 2. படைப்பலம் பலவீனம்
   3. அமெரிக்காவுடனான வர்த்தக உடன்படிக்கை
   4. சத்சுமா மீதான பிரித்தானிய குண்டுவீச்சு

7. 1 ஆம் உலக மகாயுத்தகாலத்தில் மத்திய ஐரோப்பிய நாடுகளின் நட்பு கூட்டுஅணியில் இணைந்து கொண்டு பின் பிரிந்து சென்று முக்கூட்டு நட்பு அணியில் இணைந்து கொண்ட நாடு
   1. ரஷ்யா 2. ஜேர்மனி 3. ஆஸ்திரியா 4. பிரான்ஸ்

8. 1 ஆம் உலகமகாயுத்தகாலமுடிவில் உலக சமாதானத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தை தோற்றுவிக்க முன்னின்ற தலைவர்
   1. தியோடர் ரூஸ்வெல்ட் 2. பிராங்ளின் ரூஸ்வெல்ட்
   3. ஜோசப் ஸ்டாலின் 4. வூட்டோவில்சன்

9. இரண்டாம் உலகமகாயுத்தத்தில் "அச்சுநாடுகளின்" கூட்டணி
   1. ரஷ்யா, யப்பான், ஜேர்மனி 2. பிரான்ஸ், யப்பான், ஜேர்மன
   3. ரஷ்யா, இத்தாலி, ஜேர்மனி 4. இத்தாலி, யப்பான், ஜேர்மனி

10. இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் பிரதான எழுத்து முலாதாரம்
    1. தீபவம்சம் 2. சூளவம்சம் 3. மகாவம்சம்
    4. தாதுவம்சம்

11. திரிபீடகம் தொகுக்கப்பட்டுஎழுத்துவடிவம் பெற்ற இடம்
    1. கல்விகாரை 2. அலுவிகாரை 3. ஜேத்தவனராமய 4. திஸ்ஸமகாராம

12. புவியியலின் அமைப்புக் காரணமாகநிலைபெற்ற இராசதானி
    1. அநுராதபுர 2. பொலநறுவை 3. கண்டி 4. சீதாவாக்கை

13. பின்வருவனவற்றுள் தொல்பொருள் மூலாதாரமாககருதமுடியாதது
    1. அம்பகமுகல்வெட்டு 2. வெஸ்ஸகிரிகல்வெட்டு 3. சமந்தபாஸாதிகாவ 4. கல்பொத்த

14. வல்லிபுர பொற்சாசனம் மூலம் வெளிப்படும் விடயம்
    1. விஜயபாகு காணிகளை பகிர்ந்தளித்தமை
    2. வசபனின் சுரங்கவழி நீர்ப்பாசனம்
    3. வசபமன்னனின் நாகதீப ஆட்சிப் பரம்பல்
    4. மகாசேனனின் நீர்ப்பாசன திட்டப்பணி

15. ஆரியரின் சமூகஅமைப்பில் சத்திரியரால் ஆற்றப்பட்டபணிகளுள் பொருத்தமற்றது
    1. நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்தல்
    2. அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டு மக்களை பாதுகாத்தல்
    3. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
    4. கல்வி கற்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபடல்

ஆசிரியர் :
த.அகிலன், Dip. in. Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலைவெற்றிப்படி ஆசிரியர்,
ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கி.பி 800ம் ஆண்டுக்கு

துறையினரால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் போது இத் துறைமுகச் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

"அழிடைந்த நிலையில் உள்ள கறுூண்களையும், பாரிய குழிகளையும் கண்ணுற்றபோதே அங்கொரு சர்வதேசத் துறைமுகம் இயங்கியமையை உணர முடிகின்றது" என களணி பல்கலைக்கழக அகழ்வாராய்ச்சித் துறைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்விடத்தில் சீன மட்பாண்டங்கள், வெளிநாட்டு கண்ணாடிகள் மற்றும் கனியப் படிமங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அவ்விடத்தில் வியாபாரம் நடைபெற்றுள்ளதையும் அறி முடிகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அக்காலப்பகுதியிலேயே உலோகப் பாவனை இருந்ததையும் அவ்வுலோகங்களைக் கொண்டு ஆயுதங்களையும் சிலைகளையும் மக்கள் தயாரித்துள்ளார்கள் என்பதையும் அறியக் கிடைப்பதாகக் கூறிய அவர் கால மாற்றத்தில் முற்றாகச் சிதைவடைந்துள்ள உலோகப் படிமங்களைப் பிரித்தெடுத்து மேலும் ஆராய்ச்சிக்கு உட்படுத்த நவீன தொழில் நுட்ப வசதிகள் தேவையானவை எனவும் தெரிவித்தார்.

## கிழக்கில் காணாமற்..

வரை வாகரை, செங்கலடி மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களின் 56 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான அமர்வாகவே இவ் அமர்வுகள் நடைபெறவுள்ளது.

இவ் அமர்வுகள் தொடர்பான ஆரம்ப.கட்ட வேலைகளை ஆராயும் பொருட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் கடந்த 3ம் திகதி மட்டக்களப்பிற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்தொன்பது வருட காலப்பகுதியில் வடக்கிலும் கிழக்கிலும் காணாமற் போனவர்கள் தொடர்பாக மொத்தமாக 13,700 முறைப்பாடுகளை மட்டும் பெற்றுக் கொண்டுள்ள இவ் ஆணைக்குழுவிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகளில் காணாமற்போன பொது மக்களின் முறைப்பாடுகள் வெறும் 9300 மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

## 28 வருடங்கள்...

இவ்விடயம் தொடர்பாக அவதானம் செலுத்தி மூன்று மாத காலத்துக்குள் உறுதிகள்......

வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளை செய்துதருவதாக உறுதியளிக்கப்பட்டதாக முன்னாள் மாநகர சபை பிரதி மேயர் தெரிவித்தார்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக அவர் கூறுகையில் மட்டக்களப்பு விமான நிலையமானது 1985 ஆம் ஆண்டு விஸ்தரிப்பு செய்யப்பட்டபோது பொதுமக்களுடைய காணி குடியிருப்புக்கள் சுவீகரிக்கப்பட்டது. இதன்போது சுமார் 350 குடும்பங்கள் இடம்பெயர நேரிட்டதுடன் அதிகளவிலான காணிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததாகவும், பல தடவைகள் பல கூட்டங்களில் இவ்விடயம் தொடர்பாக ஆராயப்பட்ட போதும் சரியான தீர்வு இருபத்தெட்டு வருடங்களாக கிட்டாத போதிலும், இங்கு வருகைதந்த அதிகாரிகள் உரிய விடையத்தினை கருத்திற்கொண்டு மிக விரைவாக தீர்வினை பெற்றுத்தருவதாக கூறியமைக்காக பாதிக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவர் எனும் ரீதியில் மக்கள் சார்பாகவும் நன்றிகளையும் தெரிவித்தார்.

## கிழக்கு நியமன...

கிழக்கு மாகாணத்தால் வழங்கப்பட்ட முகமைத்துவ உதவியாளர் நியமனங்களே காணப்படுகின்றன.

ஏனைய எந்த மாகாண சபையிலும் போட்டிப் பரீட்சையின் மூலம் வெற்றிடங்களை நிரப்பும் போது இன விகிதாசார முறை பின்பற்றப்படுவதில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இவ்விடயம் தொடர்பாக தமிழ் அரசியல் தலைமைகள் மௌனமாக இருப்பதாகவே பாதிக்கப்பட்டோர் மலைமுரசிற்குத் தெரிவித்துள்ளனர்.

## சிவராத்திரி...

பாவனையைக் குறைத்துக்கொள்ளுமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## தனித் தமிழீழ...

முன் நிறுத்தி தண்டனை பெற்றுத்தரவும், இலங்கை வாழ் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. சபையில் வலியுறுத்தவும், தனி ஈழம் அமைந்திட இலங்கை வாழ் தமிழர்கள் மற்றும் உலகின் மற்ற பகுதிகளில் வாழும் இலங்கை தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தவும் அ.தி.மு.க. நடவடிக்கை எடுக்கும் என்று அந்த விஞ்ஞாபனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத் தீர்மானத்தை தமிழத் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது. அவ்வமைப்பின் சார்பில் பேசவல்ல பாராளுமன்ற உறுப்பினரான சுரெஸ் பிரேமச் சந்திரன் இத் தீர்மானத்தைத் தாம் வரவேற்பதாகத் தெரிவித்துள்ளார்.

## நாங்கள் சிங்கள...

ஊடகவியலாளர் மாநாட்டிலேயே கலகொட அத்தே ஞானசார தேரர் இதனை தெரிவித்தார்.

எந்தவொரு நாட்டிடமிருந்தோ அமைப்புக்களிடமிருந்தோ அல்லது அரசாங்கத்திடமிருந்தோ நாம் பணம் வாங்கவில்லை. மாறாக எமது பக்தர்கள் வழங்கும் நிதியுதவிகள் மூலமே சிங்கள பௌத்த மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம்.

அது மட்டுமல்லாது கிழக்கில் தமிழ் மக்கள் தமது தீர்த்து வைக்கப்படாத பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்ள எம்மை நாடி வருகின்றனர்.

இவர்களுக்கான அமைச்சர்கள் எவரும் எப்போதாவது உதவி செய்திருக்கின்றார்களா? சிங்கள பௌத்தர்களுக்கு எதிரான அந்நிய சக்திகளின் சதிகளை வெளிப்படுத்திய எந்தவொரு அமைச்சரையும் உங்களால் அடையாளம் காட்ட முடியுமா? அவ்வாறானவர்கள் இன்று பொதுபல சேனா வெளிநாடுகளிடம் பணத்தை வாங்கிக்கொண்டு வெளிநாட்டு தலையீட்டுக்கு துணை போகின்றது என குற்றஞ்சாட்டுகின்றனர். முடிந்தால் அமைச்சர் வாசு நாம் பணம் வாங்கியதை நிரூபித்துக் காட்ட முடியுமா என சவால் விடுக்கின்றேன்.அத்துடன் இந்த குற்றச்சாட்டை நிராகரிக்கின்றேன். இடதுசாரிகள் எனக்கூறிக் கொள்பவர்கள்தான் நாட்டை பிரிவினைவாதத்திற்கு கொண்டு செல்லும் நிகழ்ச்சி நிரலை ஆதரிப்பதோடு சர்வதேச நாடுகளுக்கு எமது நாட்டுக்கு எதிரான விதத்தில் மன்றமுகமாக சாட்சியங்களை வழங்குகின்றன.

சிங்களமாகட்டும் தமிழாகட்டும் முஸ்லிமாகட்டும் சமயத்தின் ஊடாக எழும் அடிப்படைவாதத்தையே நாம் எதிர்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்தியா காலூன்ற..

ஒரே கம்பனிக்கு வழங்கிய உலகின் முதல் திட்டமாகும் என அவ் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மீளாய்வு மற்றும் ஆலோசனைப் பணிகளுக்காக தேர்வாகியுள்ள ஜேவி என்னும் கம்பனியின் உரிமையாளர்களுள் ஒருவராக இந்திய சுடுவலு மின் அதிகாரசபை காணப்படுகின்றது. எனவே.........

மிக முக்கிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்வது தொடக்கம் ஏனைய அனைத்து ஆலாசனைகளையும் பெறும் போது ஜேவி கம்பனியினால் வழங்கப்படும் ஆலாகனைகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும், அவ் ஆலோசனைகளில் தனது செல்வாக்கைச் செலுத்தவும் இந்திய சுடுவலு மின் அதிகாரசபைக்கு வாய்ப்புக்கள் காணப்படும். இதனால் பக்கச்சார்பற்ற ஆலொசனைகளை ஜே.வி. கம்பனியிடமிருந்து பெற்றுக் கொள்வது சந்தேகமானதே என அப் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி தெரிவித்துள்ளார்.

## கூண்டுக்குள் கடல்மீன் ...

கமெஸ் பார்மிங் நிறுவனம் இணைந்து உருவாக்கியுள்ள முதலீட்டுச் சபை அனுமதியுடனான இம் மீன் வளர்ப்புத் திட்டத்தின் ஊடாக சிறந்த வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிகின்றது.

தற்போது கடலில் கூட்டுக்குள் விடப்பட்டுள்ள மீன் குஞ்சுகளின் அறுவடையானது இவ்வருட இறுதியில் நிகழும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போரினால் கடந்த காலங்களில் கடல் வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லை. தற்போது நவீன அதியுயர் தொழில்நுட்பமான கூட்டுக்குள் மீன் வளர்க்கும் இத்திட்டமானது மீன்வளத்துறைக்கு வேகமான வருமானத்தை பெற்றுக்கொடுக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு



சிறுவர், மகளிர் துஸ்பிரயோக த்தை தடுப்பது தொடர்பான விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கானது அண்மையில் கல்லடி – உப்போடை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி திருமதி செல்வி மனோகரன் தலைமையில் துளசி மண்டபத்தில் இடம்பெற்றபோது மட்டக்களப்பு மற்றும் காத்தான்குடி காவல்துறை நிலையங்களின் மகளிர் விவகார குற்றத்தடுப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

# 60வது பிறந்த தினம்



மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரியின் பழைய மாணவியும் கல்லூரியின் அதிபருமாகிய அருட் சகோதரி எம்.எலிசபெத்தின் அறுபதாவது பிறந்த தின கொண்டாட்டமும் சிறப்பு நன்றித் திருப்பலியும் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் பாடசாலை சமூகத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டது.

# முகாம் நாடகக் காட்சி

கிழக்கு மாகாண கலாச்சார பணிப்பாளர் திரு. உபநந்த வெலிக்கல அவர்களின் தயாரிப்பில், நாடகக் கலைஞர் திரு.மு.காளிதாஸ் அவர்களின் நெறியாள்கையில் தயாரிக்கப்பட்ட இம் "முகாம்" நாடகமானது, 2014 ம் ஆண்டு தேசிய நாடக விழாவின் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகியுள்ளது. திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் 21.02.2014 அன்று மதியம் 2.30 மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கான காட்சி காண்பிக்கப்பட்டதுடன், கடந்த 26.02.2014 அன்று மாலை 6.30 மணிக்கு கொழும்பு மருதானை டவர் மண்டபத்தில் நடைபெற்றமையும் குறிப்படத்தக்கது.

(ஜெய்)




கடந்த வாரம் வெளியான இரதோற்சவப் படங்கள் உவர்மலை தூர்க்கை அம்மன் ஆலயத்தின் உற்சவம் ஆகும் தவறுதலாக கண்ணகை அம்மன் என பதிப்பிக்கப்பட்டுள்ளமைக்கு வருந்துகின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குர் ஆனை பொருளறிந்து படித்தல்

கடந்த வார தொடர்ச்சி...

நிச்சயமாக இக்குர்ஆனை நன்கு நினைவு படுத்திக்கொள்ளும் பொருட்டே எளிதாக்கி வைத்திருக்கின்றோம் எனவே இதிலிருந்து நல்லுணர்வு பெறுவோர் உண்டா? (அல்-குர்ஆன் 54:32)

மேலும் கவனிக்க வேண்டியது வட்டி. "வட்டியை உண்பவர்கள் ஷைத்தானால் தீண்டப்பட்டு பைத்தியம் பிடித்தவன் எழுவது போலன்றி (மறுமையில்) எழும்பமாட்டார்கள்" என்று வட்டி பற்றி 2:275 முதல் 280 வரை உள்ள தெளிவான விரிவுரை.

- வட்டியால் ஏற்படும் சமுதாய, ஒழுக்க, பொருளாதார ரீதியான சீரழிவுகள் மிகவும் அழகிய முறையில் விளக்கப்பட்டது.
- ஹலாலான முறையில் பொருளீட்டுதல், வியாபாரத்தின் ஒழுங்கு முறைகளும் விளக்கப்பட்டன.
- ஷேக் அப்துல் காதிர் மதனி அவர்களின் முத்திரை பதித்த சிறப்பானதொரு கல்வி வகுப்பு.

வட்டியால் ஏற்படும் நாசத்தைக் குறித்து சமுதாயத்தை விழித்தெழச் செய்வது பற்றியும் இங்கு தெளிவாக கூறப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் மத்தியிலும் தக்வா சம்மந்தமான பிரச்சனைகள் இருக்கின்றது. எனவே தக்வாவை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை குர்ஆன் சுன்னா அடிப்படையில் மிக தெளிவாக விவரிப்பதுடன் அதனை ஸஹாபாக்கள் தங்கள் வாழ்வில் எவ்வாறெல்லாம் நடைமுறைபடுத்தினார்கள் என்பதனை ஆதாரங்களின் அடிப்படையில் விவரிக்கின்றார்கள்.

முற்றும்

# பெண்களும் அவர்களின் நோன்பும்



இஸ்லாமியப் பெண்களுக்கு இபாதத்தில் அதிக ஆர்வம் உண்டு. அதிலும் குறிப்பாக நோன்பு நோற்பதில் அளப்பரிய அக்கறை உண்டு. ரமழானுக்கு முன்னரே இல்லங்களைக் கழுவி தூய்மைப்படுத்தி, நோன்பிற்கும் அதனோடு ஒட்டிய நிகழ்ச்சிகளுக்கும் தம்மைத் தயார் படுத்திக் கொள்வர். இத்தகைய சகோதரிகளுக்காக நோன்பு நோற்பதுடன் தொடர்புபட்ட சில சட்டங்களை முன்வைக்கலாம் என எண்ணுகின்றேன்.

## பயணத்தில் பெண்கள்

பயணம் செய்யும் பெண்கள் நோன்பை விட்டு விட்டுப் பின்னர் அதனைக் கழாச் செய்து கொள்ளலாம். இது பெண்களுக்கு மட்டுமுரியதல்ல. இதனை அறியாத பல பெண்கள் தம்மைத் தாமே வருத்திக் கொள்கின்றனர்.

## மாத, பிரசவ தீட்டுடைய பெண்கள்

ஹைல், நிபாஸ் எனப்படும் நிலைகளில் பெண்கள் தவிர்க்க வேண்டியவைகளில் தொழுகை, நோன்பு, உடலுறவு கொள்ளல், க.்.பாவைத் தவாப் செய்தல் என்பன அடங்கும். மற்றப்படி அவர்கள் திக்ரும் ஸலவாத்தும் ஓதலாம். மற்றவர்களுடன் ஒன்றாக உண்ணலாம், உறவாடலாம். இஸ்லாம் இவற்றை ஏனைய மதங்கள் கூறுவது போல் தீட்டாகக் கருதவில்லை. தமிழ் மொழியில் ஹைல், நிபாஸ் என்பன மாதத் தீட்டு, பிரசவத் தீட்டு என்று குறிப்பிடப்படுவதனாலேயே நாமும் குறிப்பிட்டு வருகின்றோம்.

இந்நிலையில் இருக்கும் பெண்கள் நோன்பு நோற்கலாகாது. ஆனால், இதனால் விடுபட்ட நோன்புகளை பின்னர் கழாச் சொய்ய வேண்டும்.

'நபி(ஸல்) அவர்களது காலத்தில் நாம் மாதவிடாய்க்கு உட்பட்டால் நோன்பைக் கழாச் செய்யுமாறு எமக்கு ஏவினார்கள். தொழுகையைக் கழாச் செய்யுமாறு ஏவமாட்டார்கள்' என ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புஹாரி, முஸ்லிம்)

இந்நிலையில் இருக்கும் சில பெண்கள் வீட்டில் மற்றவர்கள் நோன்புடன் இருக்கும் போது தாம் உண்பது கூடாது என்று கருதி தம்மைக் கஷ்டப்படுத்திக் கொள்கின்றனர். பிறர் அறிய உண்பதில் சங்கடங்கள் இருந்தால் தனிமையில் அவர்கள் வழமை போல் உண்பதிலோ அல்லது பருகுவதிலோ எந்தக் குற்றமுமில்லை.

சில படித்த பெண்கள் நோன்பு காலங்களில் அதிக அமல்கள் செய்யும் ஆர்வத்திலும், விடுபட்ட நோன்புகளைப் பின்னர் கழாச் செய்வதிலுமுள்ள அசௌகரியங்களைக் கருத்திற் கொண்டும் மாதத்தீட்டைத் தடை செய்யும் மாத்திரைகளைப் பயன்படுத்துகின்றனர். இது குறித்து நேரடியாக எந்தத் தடையும் இல்லாவிட்டாலும் இயற்கைக்கு மாற்றமான இவ்வழிமுறையைக் கைவிடுதலே சிறந்ததாகும். ஏனெனில், இதனல் நோன்பைக் கழாச் செய்வதைத் தவிர அவர்களுக்கு வேறு எந்தப் பாதிப்பும் வரப்போவதில்லை. தொழுகை அவர்கள் மீது கடமையில்லை.



திக்ர், ஸலவாத்து, அல்குர்ஆனை ஓதுதல் போன்ற வழமையான இபாதத்துக்களில் அவர்கள் ஈடுபடலாம். நோன்பை

தொடரும் . . .



# முதன்மை பெற்ற பெண்கள்

- முதல் பெண் தூதர் - விஜயலட்சுமி பண்டிட்.
- ஐ.நா.சபையின் முதல் பெண் தலைவர் - விஜயலட்சுமி பண்டிட்.
- விண்வெளி சென்ற முதல் இந்தியப் பெண் - கல்பனா சாவ்லா.
- உலகத்தை கப்பலில் சுற்றி வந்த முதல் பெண் - உஜ்ஜாலா ராய்.
- முதல் பெண் கணித மேதை - சகுந்தலா தேவி.
- ஆங்கிலக் கால்வாயைக் கடந்த முதல் பெண் - ஆர்த்தி சகா.

# முகம் பொலிவு பெற




வெயிலிலும், மாசு நிறைந்த இடங்களிலும் அலைந்து திரிபவர்களின் முகம் எண்ணெய் பசையுடன் இருக்கும். இதனைப் போக்கி முகம் பொலிவு பெற கீழ்கண்ட முறையை பின்பற்றலாம்.

கஸ்தூரி மஞ்சள் - 5 கிராம், சந்தனத் தூள் - 5 கிராம், வசம்பு பொடி - 2 கிராம் இவற்றை எடுத்து பாதாம் எண்ணெயில் குழைத்து முகத்தில் தடவி 1-2 மணி நேரம் ஊறவைத்து பின் இளம் சூடான நீரில் முகத்தை கழுவி மெல்லிய பருத்தித் துணி கொண்டு முகத்தை துடைத்து வந்தால் முகம் பொலிவுடன் காணப்படும். வாரம் இருமுறையாவது இவ்வாறு செய்து வரவேண்டும்.

# மீன் பிரியாணி

பிரியாணி வகைகள் எல்லோரும் பிரியமுடன் சாப்பிடக்கூடியது. மீன் மனித உடலுக்கு அவசியமான ஒமேகா 3 போன்ற அத்தியாவசிய சத்துக்கள் நிறைந்தது. அத்துடன் மீன் பிரியாணி சமைக்க எளிதானது.



## தேவையான பொருட்கள்

மீன் - 1.்.4 கிலோ, அரிசி - 2 சுண்டு, வெங்காயம் - 150 கிராம், தக்காளி - 150 கிராம், இஞ்சி, பூண்டு விழுது - 2 தே.கரண்டி, புதினா, கொத்தமல்லி இலை – 2 - 4 கட்டு, மிளகாய்த்தூள் - 1 தே.கரண்டி, தனியாத்தூள் - 1 தே.கரண்டி, மஞ்சள்தூள் - 2 – 4 தே.கரண்டி, தயிர் - 1 கப், உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - 1 - 2 குழிக் கரண்டி

## செய்முறை

மீனை சுத்தம் செய்து துண்டுகளாக்கவும். வெங்காயம், தக்காளியை பொடியாக நீள வாக்கில் நறுக்கவும். மிளகாயைக் கீறிக்கொள்ளவும். ஒரு அகலமான பாத்திரம் அல்லது குக்கரில் எண்ணை ஊற்றி காய்ந்ததும் பட்டை, லவங்கம் சேர்த்து தாளிக்கவும். வெங்காயம், இஞ்சி-பூண்டு விழுது, தக்காளி, புதினா, கொத்தமல்லி இலை இவற்றை ஒன்றன் பின் ஒன்றாகச் சேர்த்து வதக்கவும். தயிர் மற்றும் போதுமான அளவு உப்பு சேர்த்து மீனை வதக்கவும். தொடர்ந்து மிளகாய்த்தூள், தனித்தூள், மஞ்சள் தூள் சேர்க்கவும். பாசுமதி அரிசி ஒன்றரை பங்கும், சாதா அரிசி 2 பங்கும் சேர்த்து வேக வைக்கவும். பாத்திரத்தில் ஆவி போகாமல் மூடி வைத்து, சிறிது நேரத்தில் இறக்கவும். குக்கரில் ஒரு விசில் வந்ததும், குறைந்த தீயில் வைத்திருந்து அடுப்பை அணைத்து விடவும்.

# பெண்கள் கவனிக்க வேண்டியது

கிருமிகள் உள்ள ஆண்கள் பயன்படுத்தும் கழிப்பிடம், குளியல் அறை போன்றவைகளை பயன்படுத்தும் திருமணமாகாத பெண்களுக்கும் சிறுமிகளுக்கும்கூட வெள்ளைப்படுதல் ஏற்படலாம்.

கிருமித் தொற்றால் வெள்ளைப்படுதல் ஏற்பட்டால் சுரப்பு மஞ்சள் நிறத்திலோ, இளம் பச்சை நிறத்திலோ காணப்படும். அரிப்பு தோன்றும். சிறுநீர் கழிக்கையில் எரிச்சலும், கடுப்பும் தோன்றும். தாம்பத்ய தொடர்பின்போது எரிச்சல், வலி ஏற்படும் மாதவிலக்கின்போது கிருமிகள் அதிகம் பெருகுவதால் அதிகமாக வெள்ளைப்படும். யோனிக் குழாயில் நுரைத்த வெண் திரவம் தெரியும். வெள்ளைப்படுதலை ஏற்படுத்தும் கிருமிகள் பெண்ணிடம் இருந்த ஆணுக்கும் வரும். கருத்தடை மருந்துகள் நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள், ஸ்டீராய்டு மருந்துகள் போன்றவைகளை நீண்டகாலம் பயன்படுத்தி வந்தாலும் வெள்ளைப்படுதல் அதிகமாகும்.

கண்களுக்கு தெரியாத நுண்கிருமிகள் கருப்பையில் தொற்றிக்கொண்டாலும் வெள்ளைப்படுதல் அதிகரிக்கும். சிறுநீர் கழித்த ஒவ்வொருமுறையும் தண்ணீரால் கழுவுவதும் அவசியம். நுண்கிருமிகளின் வகை மற்றும் தாக்குதலின் தன்மையைப் பொறுத்த வெள்ளைப்படுதலின் அளவு அதிகரிக்கும். பால்வினை நோய்களாலும் இந்த பாதிப்பு ஏற்படும்.



கருப்பை கோளாறால் வெள்ளைப்படுதல் ஏற்பட்டால் அரிப்பு தோன்றாது. கருப்பை புற்றுநோயால் அதிக வெள்ளைப்படுதல் ஏற்பட்டால், அது இளஞ்சிவப்பாக இருக்கும். உள்ளாடையில் திட்டாக கறைபோல் படியும். ஹார்மோன் குறைபாடு காரணமாகவும் அதிக வெள்ளைப்படுதல் ஏற்படுவதுண்டு. கருத்தடைக்கு பயன்படுத்தும் சாதனங்கள், யோனிக் குழாயில் செருகும் மாத்திரைகள், அப்பகுதியில் பயன்படுத்தும் களிம்புகள் போன்றவைகளால் அலர்ஜி ஏற்பட்டு வெள்ளைப்படுவதும் உண்டு. அத்தகைய பொருட்களின் பயன்பாட்டை நிறுத்திவிட்டாலே வெள்ளைப்படுதல் சரியாகிவிடும்.

சாதாரண நிலையிலும் வெள்ளைப்படுதல் ஏற்படலாம் ஆபத்தான நோய்களின் அறிகுறியாகவும் வெள்ளைப்படுதல் ஏற்படலாம். அதனால் தொடக்கத்திலே வெள்ளைப்படுதலுக்கான காரணத்தைக் கண்டறிந்து, அதற்கு சிகிச்சை பெறவேண்டும். நவீன சிகிச்சைகளும், மருந்துகளும்

..தொடரும்..

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அந்தரங்க உறுப்பைக் கடித்த முதியவருக்குச் சிறை

அம்பாறை, திருக்கோவில் குடிநிலப் பிரதேசத்தில் மூன்றரை வயது சிறுவன் ஒருவனின் அந்தரங்க உறுப்பை கடித்து காயப்படுத்திய 55 வயதுடைய ஒருவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பொத்துவில் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஜ.என்.றிஸ்வான் கடந்த புதன்கிழமை உத்தரவிட்டார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாலர் பாடசாலைக்குச் சென்று வந்து தனிமையில் இருந்த மேற்படி சிறுவனை அதே பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடையவர் வீட்டுக்குள் அழைத்துச் சென்றுள்ளதுடன் அவனின் அந்தரங்க உறுப்பை கடித்துள்ளார். இதன்போது அச்சிறுவன் கதறி அழுத சத்தத்தை கேட்டு குறித்த நபர் தலைமறைவாகியுள்ளார்.

இதனையடுத்து மேற்படி சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் குறித்த நபரை திருக்கோவில் காவல்துறையினர் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் நீதிமன்றத்திலும் முன்னிலைப்படுத்தினர்.

# பட்டதாரிகளுக்கு நியமனம்

திருகோணமலை மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுனர்களாக கடந்த இரு வருடங்களாகக் கடமையாற்றிவரும் பட்டதாரிகளுக்கே நிரந்தர நயமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 26ம திகதி திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற நியமனம் வழங்கும் நிகழ்விலேயே இப்பட்டதாரிப் பயிலுனர்கள் தமக்கான நிரந்தர நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இந் நிரந்தர நியமனக் கடிதங்களைத் தயாரிப்பதற்கு உதவி செய்வதற்காக பயிலுனர்களே தமது செலவில் சுழற்சி முறையில் பொது நிர்வாக அலுவலக அமைச்சிற்குச் சென்று வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அறுபத்தி மூன்று உயர் தேசிய திப்புளோமா பட்டதாரிகளும் நிரந்தர நியமனங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



### கடல் வாழ் உயிரினங்கள்

# கிண்ணியாவில் கரையொதுங்கின

கிண்ணியா கச்சகொடு தீவு அரை ஏக்கர் பாலத்தில் நூற்றுக்குமேற்பட்ட விசித்திரமான பாம்புகளை நேற்று இரவு அவதானிக்க கூடியதாக இருந்தது.

இப் பாம்புகளைப் பார்ப்பதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் அப்பகுதியில் குழுமி இருந்தனர். இதுபோன்ற பாம்புகள் ஏற்கனவே கிண்ணியா கட்டையாற்றுப் பாலம், ஒறிகன் பாலம், குட்டிக்கராச்சிப் பாலங்களிலும் வெளியாகியுள்ளன.

இரவில் மட்டும் வெளியாகி மக்களை அச்சத்துக்குள்ளாக்கி வருவதுடன் பகலில் அப்பாம்புகள் தென்படுவதில்லை எனவும் மக்கள் கூறுகின்றனர்.

பாம்பை வெளியில் எடுத்துப்போட்டபோது நீராக கரைவதாக தெரிவிக்கின்றனர் இது பாம்பு போன்ற தோற்றமுடைய உயிரினம் என்றும் தற்போது நிலவிவரும் உஸ்னமான காலநிலை காரணமாக மண்ணில் இருந்து வெளிப்படுவதாக பலர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இவ்வாறு அரியவகையான மேற்படி உயிரினங்கள் திரண்டு வந்ததால், இயற்கை அனர்த்தம் நிகழ்வதற்கு அறிகுறியாக இருக்கலாமென்று பிரதேசவாசிகள் அஞ்சுகின்றனர்.

கடந்த சுனாமி அனர்த்தம் ஏற்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் கிண்ணியாவின் கட்டையாறு பிரதேச ஆற்றில் இவ்வகையான உயிரினங்கள் திரண்டு வந்ததை பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இதேகாலப் பகுதியில் மட்டக்களப்பு, செங்கலடி பாலத்திலும் இவ்வகை உயிரினங்கள் திரண்டிருந்தன.

மேலும், 2011ஆம் 2012ஆம் ஆண்டுகளில் கிழக்கு மாகாணத்தில் பெரு வெள்ளம் ஏற்படுவதற்கு முன்னரும் கிண்ணியாவின் கட்டையாறு ஆற்றில் இவ்வகை உயிரினங்கள் வந்ததை பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# அக்குறானை பாடசாலைக் கட்டிடம் திறப்பு

கிரான் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட அக்குறானை பாரதி வித்தியாலய கட்டிட திறப்பு விழா மற்றும் வித்தியாலயத்தின் முதலாவது இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுவிழாவும் பாடசாலை அதிபர் சி.சிவனேசராஜா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

அக்குறானை பிரதேச மாணவர்கள் மிக நீண்ட தூரம் பயணித்து கல்வி கற்க முடியாத நிலையிலேயே 1999ம் ஆண்டு தொடக்கம் அக்கிராம மக்களால் பல்வேறுபட்ட தரப்பினரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் புதிய பாடசாலை திறப்பதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. பின்னர் முன்னாள் முதலமைச்சரின் முயற்சியின் பலனாக 2011ம் வருடம் இதற்கான அனுமதி கிடைக்கப்பெற்று பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவ்விரு நிகழ்விற்கும் பிரதம அதிதியாக முன்னாள் முதலமைச்சரும், ஜனாதிபதியின் ஆலோசகருமாக சி.சந்திரகாந்தன் கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதிகளாக கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீகிருஸ்ணராஜா, பிரதி கல்வி பணிப்பாளர் திருமதி.குலேந்திரராஜா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், கோட்டக் கல்வி பணிப்பாளர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர். (உ.ஜெஷோமிக்கா)

# "பாரம்பரிய சீமைப்பனை" தவிர்ப்பது ஏன்?

# மக்கள் விசனம்

ஆசியாவின் ஆச்சரியமிகு நாடாக மாறும் வண்ணம் அபிவிருத்திகண்டுவரும் அழகிய இலங்கை தீவின் பல மாவட்டங்களிலும் நகரினை அபிவிருத்தி செய்து அழகுபடுத்துவதற்கு பாரம்பரிய மரங்களை மிகவும் சிரமப்பட்டு வேறு இடங்களிலிருந்து பாரிய செலவீனங்களுக்கு மத்தியில் கொணர்ந்து அழகு படுத்துவதற்காக நடுகின்றனர்.

அதுமட்டுமல்லாமல் தேசத்திற்கு நிழல் எனும் மஹிந்த சிந்தனை திட்டத்தின் மூலமாகவும் பல்லாயிர கணக்கான நிழல்தரும், பயன்தரும் மரங்களை நடுகை செய்துவரும் இக்காலகட்டத்தில், மட்டக்களப்பு மாநகரில் ஆங்கிலேயர் காலம் தொடக்கம் இன்றுவரை எமது நகரின் சில பகுதிகளில் பாரம்பரிய மரமாக காட்சிதந்து பராமரிப்பு இன்றி காணப்படும் சீமைப்பனை மரங்களை பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் கவனத்தில் கொள்ளாமல் அசமந்தமாக இருப்பது ஏன்? என பாரம்பரிய மரங்களை பாதுகாக்க வேண்டுமென்பதில் ஆர்வமாய் உள்ள பொதுமக்களில் சிலர் விசனம் தெரிவிப்பதுடன், இவ்வாறான பாரம்பரியம் மிக்க அழிவடையும் நிலையிலிலுள்ள மரங்களை பேணிப் பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கைகளை மிக விரைவாக மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றனர்.


(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

# கிழக்கில் ஒரு இந்துக் குருமார் பாடசாலையை இப்போது உருவாக்க முடியாது



கிழக்கு மாகாணத்தில் இந்து குருமார்களின் பாடசாலைக்கான ஒரு அமைப்பை உருவாக்கிவிட முடியும். வருடந்தோறும் அதற்கான நிதியை ஒதுக்க முடியும். அதற்கான அதிபரை நியமிக்க முடியும். ஒரு சபையை உருவாக்க முடியும். ஆனால் இன்றிருக்கும் சூழ்நிலையில் கிழக்கு மாகாணசபையில் அதனைசெய்யமுடியாது. அரசுக் கல்விக்கான அங்கீகாரத்தை தான் நீங்கள் இன்று பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கும். வேறு எதனையும் செய்யமுடியாது என முன்னாள் முதலமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார். மட்டக்களப்பு ஆரையம்பதியில் வேத சிவாகம பாடசாலையின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதுஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

# கிராமத்திற்கு கிராமம் நடமாடும் சேவை



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிராமம் கிராமமாக - வீடு வீடாக என்ற அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள 22 கிராமசேவையாளர் பிரிவுகளிலும், இதர பொதுச்சேவை நிறுவனங்களையும் இணைத்து ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவைகள் வேலைத் திட்டத்தின் இரண்டாவது நிகழ்வு கடந்த (25) அக்கரைப்பற்று - 7/1 கிராம சேவையாளர் பிரிவுக்கான நடமாடும் சேவை ஆரம்பித்துவைக்கப்பட்ட போது நிகழ்விற்கு தலைமைதாங்கிய பிரதேச செயலாளர் வே.ஜெகதீசன் உரையாற்றுவதை காணலாம் (எஸ்.பிரேமானந்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாங்கள் சிங்களவருக்காக மட்டுமல்ல கிழக்கின் தமிழருக்காகவும் போராடுகின்றோம்

## - பொது பல சேனா -



கிழக்கின் தமிழ் மக்கள் தீர்த்து வைக்கப்படாத தமது பிரச்சனைகள் தொடர்பாக எம்மையே நாடுகின்றனர். நாம் அவர்களுக்காகவும் குரல் எழுப்புகின்றோம்.

அம் மக்களுக்கு அமைச்சர்கள் எவரும் எப்போதாவது உதவி புரிந்திருக்கின்றார்களா? நாம் சிங்களவர்களுக்காக மட்டுமே குரல் எழுப்புவதில்லை. கிழக்கின் தமிழ் மக்களுக்காகவும் குரல் எழுப்பி வருகின்றோம் என பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் சிங்கள பௌத்தர்களின் உரிமைகளுக்காக மட்டுமல்ல தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்கவும் பொது பலசேனா முன்னின்று செயற்படுகின்றது, வெளிநாடுகளிடம் நாம் பணம் வாங்குவதை அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவினால் நிரூபிக்க முடியுமா என்றும் செயலாளர் கலாநிதி அத்தே ஞானசார தேரர் சவால் விடுத்தார்.

கொழும்பில் இடம்பெற்ற.......

## கல்லடியில் பொங்கல் விழா



கல்லடி விபுலானந்தா இந்து மாமன்ற அறநெறி பாடசாலையின் தலைவர் க.ஞானசெல்வம் தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாவின் போது நிகழ்விற்கு அருளாளராக கலந்துகொண்ட சுவாமி வேதாந்தா ஆனந்தா ஜீ மற்றும் அதிதிகள் கலந்துகொண்டிருப்பதையும் , முருகன் ஆலய பூசகர் நிரோசன் ஜி பூசையினை நிகழ்த்துவதையும் அறநெறி மாணவர்கள் பங்குபற்றுவதையும், மாணவியால் வரவேற்பு நடனம் நிகழ்த்தப்படுவதியும் படங்களில் காணலாம்.



## காணாமற்போனோரை மதிப்பிடும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

இலங்கையில் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் தேவைகள் குறித்த மதிப்பீடு ஒன்றை தாம் ஆரம்பித்துள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடனேயே இதை தாம் செய்வதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

இந்த மதிப்பீடானது காணாமல் போனவர்கள் குறித்த முடிவு தெரியாமல் இன்னமும் தொடரும் சம்பவங்கள் குறித்து மறு ஆய்வு செய்து, உறுதி செய்யவும், அதேபோன்று இந்த விவகாரம் குறித்து தீர்வு காணப்பட்ட விடயங்களை முடிவுக்கு கொண்டுவரவும் உதவும் என்று செஞ்சிலுவைச் சங்கம் கூறுகிறது.

16,000 இற்கும் அதிகமான காணாமல் போன சம்பவங்கள் குறித்த பதிவுகள் தம்வசம் இருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (பி.பி.சி)

## பல்கலைக்கழக மாணவி பாம்பு தீண்டி மரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிழூர் 110 பி கிராமத்தில் பாம்பு தீண்டியதாக சந்தேகிக்கப்படும் யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட மாணவியான கங்காதரன் மாதுமி (வயது 22) என்பவர் வியாழக்கிழமை (27) அதிகாலை உயிரிழந்துள்ளதாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே இவர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இவரின் சடலம் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## 28 வருடங்கள் வழங்கப்படாத காணி உறுதிகள் 3மாதங்களில்...



ஏ.ஜோர்ஜ்பிள்ளை

உ.ஜெஷோமிக்கா)

விமான நிலைய விஸ்தரிப்பிற்காக மக்களுக்கு வழங்கப்பட்ட மாற்று காணிகளுக்கு இருபத்தெட்டு வருடங்களாகியும் நிரந்தரமான காணி உறுதிப்பத்திரம் வழங்கப்படாது தற்காலிக அனுமதிபத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

அண்மையில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு கொழும்பிலிருந்து காணி அமைச்சின் உயரதிகாரிகள் வருகைதந்திருந்தபோது இவ்விடயம் தொடர்பாக விமான நிலையத்தினால் பாதிக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவரும் முன்னாள் மாநகர சபை பிரதி மேயருமான எ.ஜோர்ஜ் பிள்ளை விடயம் தொடர்பாக கலந்துரையாடிய போது..........

13

## கிழக்கைத் துண்டாட முயற்சிக்கும் பிரதேசவாதம்



அரியநேத்ரன்

ஆரம்பத்தில் வடக்கையும் கிழக்கையும் துண்டாட முயன்ற பிரதேசவாதம் தற்போது கிழக்கைத் தனித்தனி மாவட்டங்களாகத் துண்டாட முயற்சிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அரிய நேத்ரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மீள் குடியேற்றப் பிரதி அமைச்சர் க. முரளீதரன் "தமிழத்தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவிக்கு மட்டக்களப்பான் ஒருவனை நியமித்தால் தான் அரசியலில் இருந்து ஒதுங்குவதாக" தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் முகமாகவே இக் கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக தமிழர் ஒருவரை நிறுத்துவாராக இருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இயலுமாக இருந்தால் இதைச் செய்யட்டும். அவர்கள் எல்லாம் சம உரிமை என்றுதானே கூறுகிறார்கள். இதைச் செய்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள நாங்கள் இராஜினாமாச் செய்துவிட்டு அரசியலிலிருந்து ஒதுங்குவோமெனவும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கிழக்கைச் சேர்ந்தவர் என்பதை மறந்துவிட்டாரா பிரதி அமைச்சர் என்று கேள்வியும் அவர் எழுப்பியுள்ளார்.






## ஆரையம்பதி ஸ்ரீ சிவனேஸ்வர் வருடாந்த உற்சவம்

ஆரையம்பதி ஸ்ரீ சிவனேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தினையும் சிவனுக்குரிய மஹா சிவராத்திரி தினத்தினையும் முன்னிட்டு செல்வாநகர் பாகை மக்களால் இன்று 27.02.2014 வியாழக்கிழமை காலை தேர் திருவிழா நிகழ்வு மிக விமர்சையாக இடம்பெற்றது. (உதயகாந்)



Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org